Registered at the G. P. O. AS A NEWSPAPER

சன்மார்க்கபோதினி.

SANMARKA POTHINI

பத்திரவிலைவிகிதம்
வருஷக்கு ரூபா ௧-௫0
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் ௫0
இந்தியாவுக்கு சதம்௫
பிறதேசங்களுக்கு ௭௫

விளம்பர விலைவிகிதம்
வரி ஒன்றுக்குச்சதம் 10
௰ க்குமேல்ஒருவரிக்கு 8
௨௰ க்குமேல்............6
இணைப்பிரசுரமொவ்வொன்றிற்கும்3-ல் ஒன்று

ஒன்றுவிட்டொருசெவ்வாய்க்கிழமைகளிற்
பிரசுரஞ்செய்யப்படும்

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

Published on every
other Tuesday

VOL. XXXI
௩௧ம் புத்தகம்

JAFFNA MAY 25th 1915
யாழ்ப்பாணம் ௧௯௧௫ ௵ வைகாசி௴ ௨௰௨ செவ்வாய்க்கிழமை.

No 12
சங்கியை ௧௨

யுத்தம்! யுத்தம்!!

செர்மனியர் பிரான்சிய பெல்சியத்தில் பின்விடுகிறாராயினும் ருசியாவிலும் கலிஷியாவிற் சிலபகுதியிலும் முன்னிடுகிறார்கள்போல் விளக்குகிறது. கிழக்குப்பிரஷியாவிலிருந்து 50 மைல் தூரத்துள்ள ருசிய கடற்கரைப்பட்டினமான லிபா நகரைச் செர்மனியர் கடற்படைகளால் தாக்கி அதைக் கைப்பற்றிவிட்டனர். அதிலிருந்து மாஸ்கோ ரீக்கா முதலியவிடங்களுக்குப் புகைரதப்பாதை போடப்பட்டிருக்கின்றன. அந்நகர் உன்னதநிலைமையில் வந்தது சிலகாலந்தான். அங்கே தற்போது 67 ஆயிரம்பேர் வசிக்கிறார்கள். அங்கே வெடிமருந்துச்சாலை யந்திரசாலை எண்ணெய்ச்சாலை இரும்புச்சாலை முதலியவைகளுமுண்டாம். அங்கிருந்து கோதுமைமா மண்ணெய் ஏற்றுமதியாகின்றன. "சும்மா உழுகிற பன்றிக்கு ஒருசாண் கொழுவைக் கொடுத்ததுபோல"க் கோதுமைமா மண்ணெய் முதலியவற்றால் தட்டுக்கெட்ட செர்மனிக்கு இதுகிடைத்தது இன்னுஞ் சிலகாலம் எதிர்த்துநிற்கக்கூடிய வசதியையுண்டாக்கியிருக்கும். இதைப்பிடித்ததினால் [illegible] லுகப்படுமேயன்றி ராணுவநிலைமையையொட்டி விசேஷமேதுமுண்டாகாதென்று சொல்லப்படுகிறது. இதைச் செர்மனியர் கைப்பற்றினாலும் அதற்கப்பாலுள்ள மீடாக நகரில் ருசியர் முன்னேற்றமடைந்து வருகின்றனராம்.

லூசித்தானியா கப்பலைச் செர்மனியர் சிலஇரக்கமின்றி அமிழ்த்தியதினால் அமரிக்கரிலும் 137 பேர் சேதமாயினர். அவருள் கோடீசுரன்களும் இரண்டொருவராம். இதனால் இங்கிலந்து பிரான்சு அமரிக்கா முதலியவிடங்களில் சினம் பொங்கிக்கொண்டிருக்கிறது. அமரிக்க பிரசாதிபதியும் அதைக்குறித்துக் கடுமையானகேள்விகள் கேட்டிருக்கிறார். அந்தக்கப்பல் உலகத்திலுள்ள வியாபாரக்கப்பல்களிலெல்லாமபெரிதாயிருக்கவேண்டுமென்று 1907 ம் வருஷம் செய்யப்பட்டது. 37500 டன் நிறைகொண்டது. 762 அடிநீளமும் 87 அடி அகலமுமுடையது. மணியொன்றுக்கு 28 மைல்விதம் ஓடக்கூடியது. கம்பியில்லாத்தந்திஸ்தாபனங்களுஞ் சப்மரையின்வருகையையுணர்ந்துகொள்ளக்கூடியசாதனங்களும் அதில் அமைக்கப்பட்டிருந்தாலும் மோசம்வந்தே முடிந்தது. இது 20 லட்சம்பவுண் பெறுமதியானது. இவ்வித பெரியகப்பலை வேண்டுமென்று செர்மனி காத்திருந்து அமிழ்த்தியதாய் விளங்குகின்றது. இதற்காக இங்கிலந்தில் கோபங்கொண்டு செர்மனிய கடைகளைக் கொள்ளையடித்து அகப்பட்ட செர்மனியரைக் குரூரமாய்நடத்தி வாலிபரும் பெண்களுங் கலாதிசெய்கின்றனர். குற்றஞ்செய்தவர்நிமித்தம் குற்றமற்ற அவர்சாதியாரைச் சிட்சிப்பது சரியல்லவென்று அரசினர் கலகத்தையமர்த்திச் செர்மனியரைக் கட்டுக்காவல்செய்கின்றனர்.

டாடினல்ஸ்சலசந்தியில் தக்கவேலைநடந்துவருகிறதாயினும் கோலியாத்தென்னும் யுத்தக்கப்பல் முன்பின் 500 பேருடன் அமிழ்த்தப்பட்டுப்போனது மிகு வியசனமானகாரியம். அதில் 700 பேர்வரையிலிருந்தனரென்றும் 20 உத்தியோகஸ்தரும் 160 மாலுமிகளுங் காக்கப்பட்டனரென்றும் செய்திவருகிறது. இக்கப்பல் 1900 ம் ௵ செய்யப்பட்டது. 12095 டன் நிறையுள்ளது.

டாடினல்ஸ்சலசந்திக்குச் சண்டைக்கப்பல்களுடன் சேனையையனுப்பாத வகையில் கடற்படைத்தலைவருக்கும் மந்திரியாருக்கும் அபிப்பிராயபேதமுண்டாய் இருவரும்இராசினாமாச்செய்துவிட்டதால்இங்கிலந்து மந்திரிசபை திரும்ப அமைக்கப்படுகிறது. செர்மனிய அவுஸ்திரியர் மேற்றிசையில் சிலஇடங்களிற் பின்னிட்டாலும் கலிஷியாவில் அவுஸ்திரியர் முன்னிழந்த கோட்டையாகிய பிரஸ்மில்கோட்டையைநெருங்கிக் குண்டுமாரிசொரிகிறார்கள். சொரிந்துமென்ன? செர்மனியும் அவுஸ்திரியாவும் புறஇடங்களிலிருந்து சேனைகொண்டுவரமுடியாது. போதியகடற்பலமில்லை. கூட்டங்கூட்டமாய்ப் போய்விழுந்து மடிகிறார்கள். ஆதலால் யுத்தம் நீடித்து நடந்தாலும் முன் துருக்கியும் பின் ஆஸ்திரியாவும் அதன்பின் செர்மனியும்அடக்கப்பட்டு ஒடுக்கப்படுமென்று தடையின்றிச்சொல்லலாம்.

நமதரசாட்சியும் குடிவெறியும்.

நம்தேசத்தில் குடிவெறி வரவர அதிகரிக்கிறதென்பதைப்பற்றி மதுபானக்குத்தகைகள் வருடவீதம் ஏறிவிற்பதே அத்தாட்சி. இந்த யுத்தத்தின்பின் இத்தீமையை அரசினரும் உணருவாரென்றே நம்புகிறோம். ஏனெனில் ருசியா பிரான்சு மாத்திரமல்ல, [illegible] செர்மனியும் குடிவகையை நிற்பாட்டத் தொடங்கியிருக்கிறதென்று கேள்விப்படுகிறோம். ஆனால் நமதரசோ தங்குடிவெறி வருடன்முட்ட அஞ்சிப்போலும் போதனையுடனும் சாதனையுடனும் நிற்கிறது. அங்கிலோஅரசு பிரசைகளின் தன்னிஷ்டத்திற்குக் கேடுவிளைப்பதில்பிரியமற்றதுதான். ஆனால் பிரசைகளுக்கு அதிக இஷ்டங்கொடுத்தால் தகாதகாரியத்திலும் பிடிவாதஞ்செய்வார்களே! இங்கிலந்தின் ஆண்மாரிகளையும் ஒருவாறுச் சுயாதீனத்திலேயே விட்டுவந்தாரே! யுத்தமல்லவா அவர்கள் குதூகலத்தை அடக்கிவிட்டது. யுத்தம் முடிய மறுபடியும் கங்கணங்கட்டாதுவிடார். நல்லொழுக்கத்திற்குத் தன்னிஷ்டம் நன்மையுண்டாக்குமாயினும் துன்மார்க்கநிரையில் தன்னிஷ்டத்தைத்தடுத்துப் பலாத்காரமாய்நிறுத்தி மறமைய அரசுகளும் மெய்ச்சும்படி நடப்பதே தகுதி. ஆயினும் பெரியகாரியத்தை நாம்பேசுவதிலும் தலையிடுவதிலும் பிரயோசனமில்லை. ஆனால் குடிவெறி தகாதென அரசினருணர்ந்திருக்கும் இத்தருணத்திலேயே நம்மவரை இத்தீங்கிலிருந்து விடுவிக்கப் பிரயாசப்படவேணுமே. இதற்கு நமது யாழ்ப்பாணச்சங்கத்தார் முன்வரவேண்டும். கள்ளுத்தவரணைகள் 5 மைல்தூரத்துள்ளும் சாராயத்தவரணைகள் 10 மைல்தூரத்துள்ளும் இருக்க விடும்படி கேட்கப்படாதா? தற்போதின் ஒழுங்கைமாற்றி விற்பனையைப் பிரசித்தமாய்நடத்திச் சனங்களை அபிமானத்திற்றூண்டிவிட்டு நட்டமடைய அல்லது பலசனரைக்கெடுக்க வழிதிறக்காதபடி தடைசெய்யக்கூடாதா? இன்ஸ்பெக்டர்மாரையும் சேவகரையும் ஓரிடத்தில் வையாமல் அடிக்கடி மாற்றிவிடும்படி கேட்கப்படாதா? குடிப்பவர்கள் வைத்து வைத்துக் குடித்துக் கதைத்துக்கொண்டிருக்கவிடாமல் குறித்தநேரத்துள் அப்புறப்படும்படிசெய்யப்படாதா? இதற்குப்பதில வேறுவிதவரிவைத்துப் பொக்கிஷத்தைத் தளர்வடையாது காக்கப்படாதா? முற்காலத்தில் பூணுவரி வரிசைவார்சிபவரி முதலிப்பட்டவரியென்று ஒல்லாந்தராதியோர் வைத்தவரி இதினுங்கேடானவரியா? அது ஐசுவரியவான்களைத்தானே தாக்கும். இதையுணர்ந்து இந்த யுத்தமுடிவில் நம்சந்ததியார் குடிவெறியாலழிவுறாது மீட்கப்பட ஓர் வழிவகைதிறத்தலே சிறப்பு.

கையொப்பவரவு.
கோலாலம்பூர்
ஸ்ரீ V. சுப்பையா 4_75

யாழ்ப்பாணம்.

வரட்சி—சென்றவாரம் தென்றற்காற்றுச் சீற்றமாய்வீசியும் புழுங்கிளம்பவில்லை. கேற்றின்று தூக்கத்திலிருக்கிறது.

பிறப்பு இறப்புப் புஸ்தகங்களை இழத்தல்—சென்றவியாழக்கிழமை அச்சுவேலியின் பிறப்பு இறப்புப் பதிவுபுஸ்தகங்கள் கோப்பாய்க்குந் திருநெல்வேலிக்குமிடையில் வண்டியிலிருந்துகாணாமற்போயிற்று. அதைக் காட்டிக்கொடுப்பவர்களுக்குத் தக்க வெகுமதி செய்யப்படும்.

வால்வெள்ளி—சென்ற மாசிமீ 10௳ புதிதாய் மெஸ், மெல்லிஷ் என்பவராற் கண்டுபிடிக்கப்பட்ட வால்வெள்ளி இப்போது இரவு 10 மணிவரையில் கிழக்கேஉதித்து விடியுமுன் உச்சத்தையடைகிறது. இது ஆனிமீ சகடக்கூற்றில் பிரகாசமாய்த்தோற்றும்.

மரணசங்கதி—புறக்குடியிருப்புவாசரும் [illegible]க்குச்சென்று அங்கே பலவருடங்களாக உத்தியோகம்பார்த்துக் கடைசியிலே உபகாரச்சம்பளத்துடன் இளைப்பாறி யாழ்ப்பாணம்வந்து வசித்திருந்தவருமான மெஸ், பே. அமீடியஸ் சென்ற 2௳ கரம்பனிலே தம்மனைவியாருடைய கிரகத்திலே காலஞ்சென்ற சங்கதியையறிந்து துக்கித்தோம். இவர்க்காய்த்துயரும் இவரது சகோதரன் மெஸ், பிலிப்பையாவுடனும் சகோதரியுடனும் பிரிய பாரியாருடனும் நம்மனுதாபமுமிருக்கிறது.

கத்திக்குத்து—சென்ற 21௳ கொட்டடியில் வண்டிக்காரனான நன்னி ஆவரங்கால் சந்தையடியில் ஓர் கடைக்குமுன் வண்டிகட்டியதில் கலிபிலியுண்டாய் விலக்குப்பிடிக்கச்சென்ற சி. சிவகுரு சி. வினாசி என்னும் இருவரையுங் கத்தியாற் குத்திவிட்டான். சிவகுருவுக்கு மார்பில் வாறுணகாயம். பனங்கட்டி வியாபாரப் பொன்னியும் நன்னியுடன் எந்நேரமும் பன்னி என்னப் பின்னேசெல்வாளாம். அப்பொன்னி என்னபார்க்கிறாயென்ன நன்னி சன்னதகாரனாய்ப் பின்முன்பாராது பின்னஞ்செய்தானாம். பொன்னியும் நுகத்தையெடுத்து அகத்தையடித்தாளாம். நன்னியுடன் பொன்னியும் பிடிபட்டிருக்கிறாள். இவ்வித நட்டாமுட்டிகளாலன்றோ உலகம் கெடுகிறது. வியாபாரமென்று பேர்வைத்துத் தூவியாபாரஞ்செய்பவர் இரவில் மடங்கள் சாலைகள் முதலிய இடங்களில் முடங்கிக்கொள்ள அதனால் பல தீமைகள் நேரிடுகிறது. இவ்வண்டிக்காரன் முன்னும் இவ்வித தொந்தரவுள்ளவனும். ஆவரங்கால் சந்தையடியில் வண்டிவிட்டு வேறுவண்டிகளசெல்வதை இடைஞ்சற்படுத்துவதை நாமும் பலமுறை கவனித்தோம். இனித் தக்கஇடத்தில் ஒழுங்காய் விடும்படி தலைமைக்காரர் எச்சரித்து நடப்பிப்பாரென நம்புகிறோம்.

லோக்கல்போட்—யாழ்ப்பாண லோக்கல்போட்டாரால் நியமிக்கப்பட்டிருக்கும் மெஸ், பெரிக் என்னுமோர் அளவுகாரர் கல்மட்டத்துக்குக் கான்களை வெட்டி மாரிகாலத்தில் வெள்ளம்பள்ளநிலங்களில் நில்லாதபடி ஓடச்செய்வதற்கு இப்போது அளவைவேலை நடத்துகின்றனர். இப்படிச்செய்தால் பெரியகடை ஆதிய இடங்களில் துர்நாற்றம்வீசுஞ் சாக்கடைகளால் வருங் கெடுதி நீங்கிவிடும்.

சாராயக்குத்தகை—மட்டுக்களப்புச் சாராயக் குத்தகை வருகிற வருடத்திற்கு 85730 ரூபாவாக ஸ்ரீ கா. வைத்தியலிங்கமவர்களாலும் திரிகோணமலைக் குத்தகை 37555 ரூபாவாகவும் யாழ்ப்பாணக்குத்தகை 237555 ரூபாவாகவும் மன்னார்குத்தகை 55300 ரூபாவாகவும் ஸ்ரீ கிருஷ்ணர் கதிரேசபிள்ளையவர்களாலும் வாங்கப்பட்டிருக்கின்றன. போனவருடத்திலும் இவ்வருடம்மட்டுக்களப்புக்குத்தகை 1522[illegible] ரூபா மேலதிகமாகவும் திரிகோணமலைக்குத்தகை 100 ரூபா மேலதிகமாகவும் யாழ்ப்பாணக்குத்தகை 90990 ரூபா மேலதிகமாகவும் மன்னார்க்குத்தகை 10175 ரூபா மேலதிகமாவும் விலைப்பட்டிருக்கின்றனவாம்.

விசர்நாய்க்கடியால் மரணம்—சென்ற 13௳ மானிப்பாயில் மெஸ், இராமநாதர் கனகசபையென்பவர் மரணமடைந்தனர். அவ்விடத்தில் விசர்நாயாற்கடியுண்ட சிலர் இன்னுமிருக்கிறார்கள்.

இலங்கை.

மெஸ், வி. விருஸ்பிள்ளை ஜே. பி.—யூ. பி. எம்.—முசலி அதிகாரவேலைபார்த்து ஒருவருடத்தின்முன்னே இளைப்பாறியிருந்த மெஸ். விருஸ்பிள்ளைமுதலியார் சென்ற 7௳ இரவு காலஞ்சென்ற சங்கதியறிந்து மிக்க மனத்துயருற்றோம். இவர் அப்புக்காத்து மெஸ், யோசேப் அவர்களின் தந்தையார்.

நோய்தீர வுபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உப்பு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்ஸன்) காரணம். நீர்ப்பலமாயும், ரோகம் முதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாதது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்கிறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும்,ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணங்கேளுங்கள்:—முதுகுநோய், தூக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமா யிறங்குவது, மூத்திரம் நிறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலவீனமான இருதயம், தலைநோவு; தைரியமில்லாமை, கண் பார்வையின் மந்தம், தலைச்சுற்று, கீல்களும், சதைகளும் புண்ணாகி அசைக்க முடியாமற் போவது, மறதி, சாதாரண பலவீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால், கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், திமிர்வாயு, மகோதரம், பகு மூத்திர ரோகம் முதலானவைகளும், ஸ்திரீரோகமென்று தப்பாக எண்ணிக்கொள்ளும் ரோகங்களும்.

(டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோக மாத்திரைகள், மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால், சரீரசுகம் தப்பாமல உண்டாகும். சுகமாய் இருக்கவேண்டுமானால் மூத்திரப்பை ரோகமடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள்வதற்கு ஏற்ற மருந்து(டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.

DOAN'S BACKACHE KIDNEY PILLS
Doan's Backache Kidney Pills Co's.
KIDNEY COMPLAINTS

ஒரு புட்டி விலை, ரூபா.	2	0	0
6 புட்டியின் விலை, ரூபா.	10	8	0

இவை, சீமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜண்ட் டப்பிளியு. ஏச். வல்லர் துரையவர்களிடத்திலும் கிடைக்கும். [Tam

இலங்கைக்கோர்கைத்தொழிற்சங்கம்—இலங்கைக் கோர் கைத்தொழிற் சங்கத்தை ஸ்தாபித்தலைப்பற்றி ஆலோசித்தற்குக் கொழும்பிலே ஓர்சபைகூடிற்று. அச்சபையிலே மெஸ், ஆதர் அல்விஸ் அவர்கள் அக்கிராசனம்வகித்திருக்க கௌரவ ஸ்ரீ பாலசிங்கம் அவர்கள், மெஸ, எட்மன் ஜயவர்த்தன, மெஸ், சி. ஏ. ஜயவர்த்தன, டக்றர் ரத்தினம், மெஸ், அருளானந்தம், டக்றர் குமாரசுவாமி, மெஸ, மூத்துக்கிருஷ்ண, மெஸ், மாசிலாமணி ஆதியோர் சமுகமளித்தனர். அக்கிராசனபதியவர்களும் பாலசிங்கமவர்களும் கைத்தொழில் விருத்தியைக் குறித்து உபந்நியாசித்தனர். இச்சங்கத்தை நடத்துவதற்குவேண்டிய ஒழுங்குகள் செய்தபின் அதுவிஷயமாக ஒரு பிரசித்த சபை கூட்டப்படுமாம். நன்முயற்சி.

சத்துராதியோடுவியாபாரஞ்செய்தவர் தண்டிக்கப்பட்டது—சேர்மனிய சாமான்களைவிற்று வியாபாரஞ்செய்த இலக்குமணன்செட்டியார் கொழும்புப்பொலிசுக்கோட்டில் விளங்கப்பட்டு 7500 ரூபா அபராதம்விதிக்கப்பட்டனராம்.

தப்பியோடியசெர்மன்மறியற்காரன்பிடிபடல்—டியத்தலாவிலமறியற்படுத்தப்பட்டிருந்து தப்பியோடிய மெஸ,கொக்ளெனுமோர்சேர்மன் மறியற்காரன் இப்போதுபிடிக்கப்பட்டானாம்.

இலங்கை வைத்தியத்தலைவர்—உபகாரச்சம்பளத்துடன் இளைப்பாறும் சேர் அல்லின்பெரி அவர்களிடத்திற்கு டக்றர் G. J. ருதமோட் அவர்கள் அக்டிங்காய் நியமனம்பெற்றிருக்கின்றனர்.

மரணம்—கொழும்பிலே பரிஸ்றர் மெஸ, N. தியாகராசா அவர்களும் சென்ற 8உ தேகவியோகமானதினால் துக்கித்தோம்.

யுத்தசகாயநிதி—உவேல்ஸ்இளவரசரின் யுத்தசகாய பணநிதிக்கு இலங்கையிலே சேர்ந்திருக்கிறபணம் 578638 ரூபாய் 57 சதம். இதில் 525000 ரூபாய் இங்கிலாந்துக்கு அனுப்பியாயிற்று.

சலாபப்புகைரதவீதி—இதில் வருகிறமாசந்தொடக்கம் கொச்சிக்கடைவரைக்கும் பிரயாணிகளை ஏற்றிச்செல்ல ஒழுங்குசெய்யப்பட்டிருக்கிறது.

மெஸ், எல். ஏ. பெல்டாஜேறு—இவர் றெயில்வே உத்தியோக பரீட்சைக்குச்சென்று அரங்கேறிக் கொழும்புக்கு அறுமைல் தூரத்திலுள்ள கீயுக்கொடை ஸ்ரேசனிலே புக்கிங்கிளார்க்காக நியமிக்கப்பட்டார். இவர் விடத்தல்தீவிலுள்ள அரசாட்சியாரின் மருந்துச்சாலை வைத்தியரும் நம் பத்திராபிமானியுமான மெஸ், ஏ. பி. பெல்டாஜேறுவின் சிரேட்டபுத்திரன், மேலும் உயர்வெய்துவாராக.

மின்னறத்துக்கு உயிர்வந்தது—அமரிக்காவுக்கு மின்னறம் ஏற்றுதபடி தடுக்கப்பட்டகாலந்தொட்டு இலங்கை மின்னறவியாபாரம் நின்றுவிட்டது. சுரங்கங்கள் நிறுத்தப்பட்டது பெரிய நஷ்டமாயிற்று. சென்றமாசம் தேசாதிபதியின் சம்மதத்தாலே அமரிக்காவுக்கு மின்னறம்ஏற்ற உத்தரவு வந்தது. இருப்பிலிருந்த மின்னறங்களெல்லாம் ஏற்றியனுப்பப்பட்டன.

அவளுடைய முகக்குறிகாட்டும்.

இளைஞரான சிலபெண்பிள்ளைகள் சிலகாலங்களிலே வெளுத்துநோய்கொண்ட முகத்தினராயிருப்பதைக்காண்பது எவ்வளவு ஆதனம். ரேஸ்திரமான இயற்கையழகை இக்காலத்திலே விருத்திவிடாதபடிக்கான புத்தி வந்திருக்கிறது. சொத்தைகளிலே ரோஸ்திறமில்லாத அனேக பெண்களுண்டு. அதில்லாத நியாயமென்னவெனில் அவர்களுடைய இரத்தம் சுத்தமும் செழிப்புமில்லாதிருப்பதாம். அவர்களுடைய உடம்பு [illegible] அவர்களுடைய உடலின் வளைதம்தாழ்ந்தும் குழிபதிந்த கண்களும் அவர்கள்சுகமற்ற நிலையிலிருக்கிறார்களென்பதைக் காட்டுகின்றன. இரத்தமில்லாத தன்மையை நீக்கிக்கொள்ளாது அசட்டைசெய்தால் அந்தப்பெண்பிள்ளை தன்சீவியகாலம் முழுதும் நோய்க்காரியாவாள் நோயுள்ள ஒருத்தியைத் தன் மனைவியாக்கிக் கொள்ள ஒருவனுமவிரும்பான்.

சுகமும் சத்தமுமான இரத்தமில்லாத பெண்பிள்ளையைவருத்தும் வேறுநோய்களெவையெனில் தலையிடி, நம்புப்பிடிப்பு, முதுகுநோ, பசியின்மை, தன்வேலை நுய்வில் பெலவீனமும் சோம்புக்குணம் இவை முதலியவைகளாம்.

அவளைப் பெலனும்முகவசீகரமுமுள்ளவளாக்க ஒரே ஒருவழியுண்டு. அது புதிதும்செழிப்புமான இரத்தமாம். ஆயிரக்கணக்கானபெண்பிள்ளைகளும் பெரியோர்களும் சாட்சிசொல்லுகிறபடி டக்டர்உவில்லியம்ஸ் பிங்பில்சே இரத்தத்தையுண்டாக்கிச்சுகத்தைக்கொடுத்து தேகத்தைவளர்க்கிறதென்று பேர்பெற்றதாயிருக்கின்றது. ஆகையால் டக்டர் உவில்லியம்ஸ் பிங்பில்சை வாங்கி ஒழுங்காய்ச்சாப்பிடுவதற்குத் தொடங்கு உன்னுடைய சக்தியும் முயற்சியும் நீ வளர்ந்துகொண்டுவருவதைக்கண்டு அதிசயப்படுவாய். இலங்கையிலே மருந்துவியாபாரிகளெல்லாரும் இதைவித்துவருகிறார்கள். போத்தல் ஒன்று 2 ரூபாவும் 6 போத்தல் 11 ரூபாவாவும்வாங்கலாம்.

அங்கிலோ அரசாட்சியின் நீதியினபோதனை.

இது எட்டியாந்தோட்டை மீப்பிட்டிச்சந்தைத்தோட்டக ஹெட்கங்காணி குருவாயிரால் எழுதப்பட்டது.

(11ம் இலக்கப் பத்திரிகைத்தொடர்ச்சி.)

இலங்கைத்தேசங்களில் பூர்வமாக [illegible]க்கூடிய இந்தியாசம்பந்தமுன்னசாதி சிங்க[illegible]தமிழ்ச்சனங்களே. நாமெல்லோரும் இ[illegible] இங்கிலீஷ் இராசாங்கத்தைப்பற்றி இவ்வளவு துக்கப்படவேண்டியதற்குச் சில திருஷ்டாந்தங்களுண்டு. அதாவது சீடந்தாலமுதல நம்முடைய சகலதுக்கங்களையும் நிவிர்த்திசெய்து நம்மெல்லோர்களையும் இரட்சித்துப் பாதுகாத்துவருகிறார். அதாவது நமமுடையமுன்னோர்காலத்தில் கண்டி இராசாவென்றுசொல்லப்பட்ட வடுகவம்சத்தவராய்க் கண்டிமாநகரத்தைஅரசாட்சிசெய்த ஸ்ரீ விக்கிரமசிங்கன் மகாராசாவென்பவர் குடிபடையாகிய நம்முடைய முன்னோர்களை மிகவும் கஷ்டப்படுத்திவந்தார். அதாவது குடிகளுக்கு வரிகளைச் சாஸ்தியாகநியமித்தார். சகராமங்களான வர்த்தகர்களை கஷ்டப்படுத்தினார். யௌவனமுள்ள ஸ்திரிகளை இராசமாளிகைக்கு அனுப்பும்படியாக ஆடர்செய்தார். ஒவ்வொரு சொற்பகுற்றத்திற்குங் கொடுமையானதண்டனைகளை ஏற்படுத்தினார். அதாவது குற்றவாளிகளைக் கைகால்களைத் தண்டித்தலும் கண்களைப்பிடுங்குவதும் மிருகங்களைப்போல் முழங்கால் முழங்கைகளினால் நடத்தி அடிப்பதும் உயர்ந்த மலைகளிலிருந்து கைகால்களைக்கட்டி உருட்டிவிடுவதும் [illegible] இப்படியான வினோதமாகக் கஷ்டப்படுத்திவந்தார். மந்திரிமார்கள் நல்லபுத்திகளைப்போதித்தால் அவர்களையுஞ் சிரசாக்கினைசெய்வார். இந்தப்பிரகாரம் அரசாட்சிசெய்துவருங்காலத்தில் ஆலப்பனை என்னும் முதல்மந்திரியைச் சப்பிரகாமமாகாணத்திலுள்ள விஸ்கிப் பணங்களை அறவாக்கிக்கொண்டுவாருமென்று அனுப்பிப்போட்டு அவருடையபெண்சாதியாகிய குமாரியாமிலை இராசசபையிலழைத்து உன்தங்கையாகிய இரஞ்சிதபூஷணியை அரண்மனைக்கு அனுப்பவேண்டுமென்று ஆடர்செய்தார். இராசாக்கேட்டகேள்விக்கு முதலமந்திரியாகிய ஆலப்பனையின் பெண்சாதியாகிய குமாரியாமி சம்மதிக்கவில்லை. குமாரியாமிஇடங்கொடுக்காததினால் இந்த அம்மாளுடைய இரண்டு குழந்தைகளையுங் கொண்டுவந்து பிள்ளைகளுடைய தலையையறுத்துக் கல்லுரலில்விட்டு இருப்புலக்கையைத் தாயாகிய குமாரியாமிகையில்கொடுத்து இடிக்கும்படி இராசாசெய்தார். அப்படியே அந்தஅம்மாள் செய்தபிற்பாடு குமாரியாமியைக் கழுத்தில் கல்லைக்கட்டிக் கண்டித் தெப்பக்குளத்தில் தள்ளும்படியாக ஆடர்செய்தார். சேவகர்கள் இந்த அம்மாளுடையகழுத்தில் கல்லைக்கட்டுவதற்கு ஆயத்தமாயிருக்கும்போது இந்த அம்மாள் கடவுளைநினைத்துத் தியானஞ்செய்து தானே தெப்பக்குளத்தில்விழுந்து இறந்துபோய்விட்டாள். இந்தச்சங்கதிகளையெல்லாம் குமாரியாமியின் தங்கையாகிய இரஞ்சிதபூஷணி [illegible] குமாரியாமி விழுந்தகுளத்தில் தானும்விழுந்து இறந்துபோனாள். இந்தச சங்கதிகளையெல்லாம் முதல்மந்திரியாகிய ஆலப்பனை கேள்விப்பட்டு எல்லாம் கடவுளசெயலென்று துக்கத்துடன் தானும்புதேசத்து அரசாட்சியாராகிய இங்கிலீஷ் இராசாங்கத்தாரைச் சரணமடைந்து தனக்குநேரிட்ட துக்கங்களைச் சொல்லும்போது உடனே ஆங்கிலஅரசாட்சியார் ஆலப்பனையென்னும் மந்திரியைக்கூட்டிக்கொண்டு கொழும்புதேசத்திலிருந்து பட்டாளங்களுடனேபுறப்பட்டுக் கண்டிமாநகரத்தின் அருகிலிருக்கும் சப்பிரகாமத்தில்வந்து சண்டைக்கொடிநாட்டிச் சண்டைப்பேரிகையறைந்தார்கள். அப்போது சகலசனங்களும் இன்றோடு நமக்கு நல்லகாலம்பிறந்ததென்று சந்தோஷமாகவிருந்தார்கள். அப்போது சிங்களராசாவாகிய ஸ்ரீவிக்கிரமசிங்கன் பேரிகையின்சத்தத்தை உற்றுக்கேட்டு ஓ வேறோ மோசம்வந்ததென்றுபயந்து சண்டைசெய்யத் தைரியமில்லாமல் தன்னுடைய பெண்சாதி பிள்ளைகளைக்கூட்டிக்கொண்டு தெரியாமல் ஓடிப்போவோமென்று போகும்போது ஆலப்பனையின் பெண்சாதிபிள்ளைகளுடைய சொப்பனம் எங்கும் போகவிடவில்லை. தேவாலயமாகிய கதிர்காமக்கோயிலில் ஒளிக்கப்போகும்போது பாவியின்மேல் படலாகாதென்று கத்தாரிமீகாயிலாகிய குகையும் மூடிக்கொண்டதாம். அப்போது ஆங்கில அரசாட்சியார் அரண்மனையில்வந்து இராசனைப் பார்க்கும்போது அரண்மனையிலகாணமல் சேவகர்களைவிட்டுத் தேடும்போது சீர்த்திசிங்கன் கத்தாரமலைக்கோயில் குகைவாசப்படியில் அழுதுகொண்டு நிற்கும்போது ஆங்கிலேயபடிப்பாய்கள் சிங்கள இராசாவாகிய சிரீவிக்கிரமசிங்கனை கைப்பிடியாகப்பிடித்து அடபாவி உன்னை நாங்கள் தண்டிக்கமாட்டோம், கடவுள் தான் தண்டிக்கவேண்டும் என்று [illegible] அந்தமான்தீவுக்கு அனுப்பிவிட்டார்கள். சீர்த்திசிங்கன் இராசாவுடைய பெண்சாதி பிள்ளைகளுக்கு யாதொரு வருத்தமுமுண்டாகாமல் பாதுகாத்து அவர்கள் வம்சவிர்த்தியாகும்படி ஜீவனமும் பணமும் மானியங்கொடுத்து அவர்கள் சுதந்தரபூமியான இந்தியாவுக்கு அனுப்பிவிட்டு இங்கிலீஷ்கொடியை நிலைநாட்டித் திட்டவரையடக்குவதற்காக போலிஸ் மாஜிஸ்திரேட் கோடு தலானவைகளையும் தேசத்திலிருக்கும்மார்க்கங்களின் சேஷ்மலாபங்களைத் தன்னுடைய ஆட்களுக்குத் தெரிவித்து கடிதமூலமாய்த்தெரிவித்துச் சுகமுற்றிருக்கும்படிக்குத் தபாலாபீசுகளையும் ஏற்படுத்தக் குடிபடையாகிய நம்மெல்லோர்களையும் அதுமுதல் இதுவரையில் எவ்வளவு கண்மையாக நடத்துகிறார். பார்த்தீர்களா? இங்கிலீஷ் இராசாங்கத்தின் அருமையை. ஆகையால் நம்மெல்லோருக்கும் நேரிடக்கூடிய ஆபத்துக்களையும் சகல துக்கங்களையும் நிவிர்த்திசெய்து நம்மெல்லோர்களுக்கும் ஜீவனவிர்த்தியுங்கொடுத்து நம்மையுந் தயவுடன் பாதுகாத்துவருகிற நம்முடைய இங்கிலீஷ் இராசாங்கத்தைப்பற்றி நாமெல்லவரும் சொந்தமனாட்டி முயற்சிசெய்யவேண்டும். நம்முடைய உயிர் அவர்களுடையதாகவும் நம்முடைய திரவியம் அவர்களுடையதாகவும்வைராக்கியம்வைத்திருக்க வேண்டும்.

அலகயினும் இப்பொழுது நம்முடைய தாய்த்தேசமாகிய இங்கிலாந்து இங்கிலீஷ் இராசாங்கத்திற்கும் பிறதேசமாகிய சேர்மன் இராசாங்கத்திற்குஞ் சண்டைநடக்கிறது. இந்தச்சண்டையானது நம்மெல்லோர்க்குந் துக்கத்தையுண்டாக்கக்கூடியதாயிருக்கிறபடியால் நம்மெல்லோர்களையும் இரட்சிப்பதற்காக நம்முடைய இங்கிலீஷ்படைத்தலைவர்களான சிப்பாய்மார்கள் எதிராளிகளுடனெதிர்த்துச் சண்டைசெய்ததில் சிலர் இறந்துபோனார்கள். இந்தத்துக்கம் நேரிடாமலிருந்தால் அவர்களும் அவர்கள் பெண்சாதி பிள்ளைகளுடன் சுகமாகச் சீவித்திருப்பார்கள். நம்மெல்லோர்களுக்காகவும் இவர்கள் பாடுபட்டு மரணமடைந்திருப்பதால் இவர்களுடைய சந்ததியார்களை விர்த்தியாக்கவேண்டியது நம்மெல்லோர்களுடைய கடமையாயிருக்கிறபடியால் நம்முடைய இங்கிலீஷ்படைத்தலைவர்களான சிப்பாய்மார்கள் சண்டையிலிறந்துபோனவர்களுடைய குடும்பத்தார்களுக்குச் சீவனவிர்த்திக்காக நாமும் நமக்கியன்றமட்டும் தருமப் பொருளுதவிசெய்யவேண்டும். ஆனால் நாங்கொடுக்கக்கூடிய சொற்ப தொகையா அவர்கள் ஆயுள்பரியந்தம் சீவனம் நடத்தப்போகிறது. அவர்களுக்குச் சீவனம்கொடுக்கக் கடவுளிருக்கிறார். ஆனால் உலகத்தைக் கடவுள் காப்பார். ஊர்களை அரசர்காப்பார். வீடுகளைப் புருஷர்காப்பார் என்னும் பழமொழிப்படி உலகத்திலுள்ள செந்துக்களுக்குக் கடவுளுடைய அருளில்லாவிட்டால் எல்லாம் நிர்மூலமாகிவிடும். ஊராகிய தேசங்களை அரசராகிய இராசாக்கள் காத்து இரட்சிக்காவிட்டால் உலகம் கட்டுக்கொ[illegible]. (வரும்)

யுத்ததந்தி.

பிரான்சிய பெல்சிய யுத்தம்.

10உ வடகடலுக்கும் நியூட்சகருக்குமத்தியில் சேர்மனியர்தாக்கியும் அதைத்தடுத்து அவர்களுக்கு வெகுசேதமுண்டுபண்ணிவிட்டோம். பரோபெலில் சிறிதுபூமி பிரித்தானியர்வசப்பட்டது.

கர்னேக்குத்தெற்கிலே மூன்றலரமைல் நீளமுள்ள போர்முனையில் பலமாய்அரண்படுத்தப்பட்ட 3 வரிசை அரண்களைப் பிடித்தோம்.

பார்தெத் என்னும்கிராமத்தையும் வேரோர் கிராமத்தில் அனேகவீடுகளையும் கைப்பற்றினோம். 2 ஆயிரம்சேர்மனியரைக் கைதிகளாக்கி 6 பீரங்கிகளையும் கைப்பற்றினோமென்று பிரான்சிய அறிக்கை கூறுகிறது.

செயின் றியார்ஜுக்குக்கிழக்கேஅரண் படுத்தப்பட்ட ஓர்தோட்டத்தைப் பிரான்சர் பிடித்துவிட்டனர்.

டங்கர்க்குநகர்மேல் இன்று இரண்டுகுண்டுகளைச் சேர்மனியர் பிரயோகித்தனர்.

கார்னேக்கும் வேரோர் கிராமத்திற்குமிடையில் நாம் முன்சென்றிருக்கிறோம். மூவாயிரம்சேர்மனியரைக் கைதிசெய்தோம். அவருள் 40 உத்தியோகஸ்தரும் ஒரு கர்னலுமிருக்கிறார்கள். நேற்றும் இன்றும் 10 பீரங்கிகளையும் 50 மெஷின்பீரங்கிகளையும் நாம் கைப்பற்றினோமென்று பிரான்சிய அறிக்கை கூறுகிறது.

11உ அருஸ்சுகரிலிருந்து கடாடல் வரையும் 70 மைல்நீளமான போர்முனையில் உக்கிரமான சண்டைநடக்கிறது. சுலேசுகருக்குப்போகத்துணிந்த சண்டைநிச்சண்டையிதுவாம். இருபகுதியிலும் அதிகசேதங்கள் நேரிடுகின்றன. இப்பிரிஸ்சுகரை முன்னேறிப்போதுமில்லாதபடி சுகியையாயத் தகர்த்தார்கள். பிரித்தானியர் தங்கிய அரணைச் சேர்மனியர் துவளாக்கினர். அதனால் பிரித்தானியர் அவ்விடங்களை விட்டுப்போகும்படி நேர்ந்தது. ஆயினும் சேர்மனியர் கூட்டமாய் முன்வந்தபோது பீரங்கிப்பிரயோகத்தாற் சேதமானதுடன் எதிர்த்தடிக்கவும் பட்டார்கள்.

விஷக்காற்றைப் பிரயோகித்தபின் சேர்மன்சாலாட்படை முன்வந்தும் பலனடையவில்லை. நமது குண்டுகளால் அவர்களுக்கு அதிகசேதமென்று சர்ஜான் பிரான்சின் அறிக்கைகூறுகிறது.

பெல்ஜியத்தில் நாம்பிடித்த ஸ்தலங்களை மீட்கச் சேர்மனியர் முயன்றும் எதிர்த்தடித்துவிட்டோம்.

அருசுக்குவடக்கே நாம் முன்னேறுகிறோம். காரென்சிக்கிராமத்தின் கீழ்ப்பாகத்தையும் அங்கிருந்து சென்செருட்போகும்தெருவையும் வசப்படுத்தினோம். மெசின்பீரங்கிகளையும் 230 போர்வீரரையும் மறியற்படுத்தினோம். அக்கசரை மூன்று பக்கங்களிலும் சூழ்ந்திருக்கிறோம். அதனால் சேர்மனியரின்போக்குவரவு அபாயத்துக்கிடமாயிருக்கிறது. டினமூட்டுக்குவடக்கே பெல்ஜியர் முன்னேறுகின்றனர், சேர்மனியர் இரவில்தாக்கினதையும் தடுத்துவிட்டனர். அக்கசருக்குத்தெற்கே சிறிதுபூமியையும் வசப்படுத்தினர்.

[illegible] பிரித்தானிய சேனைகள் விஷக்காற்றால் தாக்கப்பட்டனர். ஆயினும் அதனால் பாதகமடையாமல் எற்றசாதனைகளைச் செய்துகொண்டனர். பின்பு அக்காற்று விலகியபின் சேர்மனியர் கூட்டக்கூட்டமாய் முன்வரவே மெசின்பீரங்கிகளாலும் துப்பாக்கியாலும் பிரித்தானியர் அதிகசேதத்தை விளைவித்தனர்.

ஹுலுகென்றஇடத்தில் பிடிவாதமான சண்டைநடந்தபின் பலஅரண்களையும் சேர்மனியரின் பலமானஸ்தலத்தையும் நாம் கைப்பற்றிவிட்டோம். காடர்டாம்டிலாசேதலில் ஒருநேசரிலைச் சேர்மனியர் கோட்டைபோல அரண்செய்திருந்தனர். அதையும்வசப்படுத்தினோம். அதற்குத் தெற்கிலுள்ள சேர்மன் அரண்களெல்லாம் பிடித்துவிட்டோம், அங்கே அற்றுக்கணக்கான சேர்மனியர் மாண்டுகிடந்தனர்.

பகலுக்குச் சேர்மனியர்தாக்கியதைத் தடுத்துவிட்டு காலசுகனி சவுசஸ் என்னும் கிராமங்களை ஜயித்து வளைந்துகொண்டோம். அதனால் சேர்மனியரின் போக்குவரத்துக்கு இன்னும் அதிக அபாயம் நேரிட்டிருக்கிறது. நியூவாம்ஸ்டகாஸ்ட் என்றகிராமத்திற்கருகே உக்கிரமான போர்புரிந்து அக்கிராமத்தின் கல்லறை ஸ்தலத்தைவசப்படுத்தி அக்கிராமத்தையும் சூழ்ந்திருக்கிறோம். பல சேர்மனியரைக் கைதிசெய்தோம்.

லென்ஸ்நகரிலிருந்து சேர்மனியர் மோட்டார்வண்டிகளில் போகவேய்ந்தப்போயும் ஓரிடத்திலாவது பலனடையவில்லை என்றுபிரான்சியஅறிக்கை கூறுகிறது.

டங்கர்க்நகர்மேல் சேர்மன்விமானங்கள் 2 வெடிக்குண்டுகளை எறிந்தபின் பர்கியூஸ்நகரிலும் 11 குண்டுகளை எறிந்தன. அதனால் 12 பேர்கொல்லப்பட்டனர். பிரான்சுச்சேனைகளால் ஒன்றும் பிரித்தானியசேனைகளால் ஒன்றுமாக இரு சேர்மன்விமானங்கள் நாசமாக்கப்பட்டன. ஒரு பிரித்தானியவிமானத்தையும் சேர்மனியர் சுட்டுவீழ்த்தினர்.

12உ அருஸ்நகருக்குவடக்கே நாம்பிடித்தஇடங்களைப் பத்திரப்படுத்திக் கொண்டோமாயினும் ஆல்என்னுமிடத்தில் சேர்மனியர் இரவில்திடீரென்று தாக்கி பாதல் நமதுகைவசமானபூமியில் ஒருபாகத்தை மீட்டுவிட்டனர்.

நாம் கரென்சிக்கிராமத்தை நெருக்கிவிட்டோம். அதற்கருகே கடைசியாயுள்ள சேர்மனியரின் போக்குவரவுக்கும் ஆபத்துநேரிட்டிருக்கிறது. சனிக்கிழமை 4 ஆயிரம்சேர்மனியரைக்கைதியாக்கினோம்.

13உ வடபிரான்சில் முக்கியமான சண்டைநடப்பதினால் நமக்குச் சேதமுமதிகம். சேர்மனியருக்கு அதிகசேதம். லாபாசியைப்பிடிப்பது கஷ்டமாயினும் சோயன் பின்னரண்களை நமது ஆகாயப்படையொன்று தாக்க சேர்மனியர் பயமடைந்திருந்தசமயத்து லாபாசியின் சுற்றுப்புறங்களைப் பிரித்தானியசேனைகள் சூழ்ந்துகொண்டன. அதற்கு ஆபத்துண்டாயிருக்கிறது.

பாரிஸ்நகரைச்சுற்றியுள்ள ஓரிடத்தில் 12உ சேர்மன் விமானப்பறந்து வெடிக்குண்டுகளை எறிந்ததினால் 6 யுத்தவீரர் காயப்பட்டனர்.

காரென்சிஎன்றகிராமத்திற்கருகிலுள்ள காட்டையும் அதற்குவடக்கேயுள்ள ஒருகுன்றையும வசப்படுத்தினோம். அக்குன்றைப் பலமாய்ச்சேர்மனியர் அரண்செய்திருந்தனர். அனேகரை வெட்டியால் தாக்கிக்கொன்று 30 உத்தியோகஸ்தரையும் 1020 போர்வீரரையும் கைதியாக்கினோம். கிழுவிக்லி கிராமத்தைப்பிடித்ததுடன் அதற்கும் சிவென்சிக்குமிடையிலுள்ள தெருவையும்பிடித்துவிட்டோம். அங்கே விடுவிடாசப்பிடித்தச்சேர்மனியரை வடகரைக்குப்போகும்படிசெய்து அக்கிராமக் கரையையும் சூழ்ந்துகொள்ளுகிறோம், பாயஸ்லி பிரீடர் என்னுமிடத்தில் ஒருவரிசை அரண்களைக் கைப்பற்றினோமென்று பிரான்சிய அறிக்கை கூறுகிறது.

இப்பிரீசுகுவடக்கே சண்டைநடக்கிறது. மெனின் என்றஇடத்திற்குப்போகும் தெருவக்குவடக்கிலுள்ள நமது அரண்களை இன்று சேர்மனியர் உக்கிரமாய்த்தகர்த்தனர். அதனால் நமதுகொத்தளங்கள் அழிக்கப்பட்டதினால் நமது போர்முனையைச்சிறிது திருத்தியமைக்கநேரிட்டது. ஆயினும் போர்முனைமுழுவதையும் திருத்தியமைத்துவிட்டோமென்று சர்ஜான் பிரான்சின் அறிக்கைகூறுகிறது.

14உ காரென்சியில் பல மெசின்பீரங்கிகளையும் மூவாயிரந்துப்பாக்கிகளையும் அனேக குண்டுகளையும் இன்னும் பலவகையானபீரங்கிகளையும் கைப்பற்றினோம். அக்கிராமத்தின் அருகிலுள்ள காட்டில் 3 படைவகுப்பைச்சேர்ந்த சேர்மனியர் மாண்டுகிடந்தனர். அவ்வென்கிராமத்தை கைவசப்படுத்தியதுடன் நூற்றுக்கணக்கான சேர்மனியரையும் கைதிசெய்தோம். கிழுவிக்கிராமத்தில் இன்னும்பல வீடுகளைத்தகர்த்து 17 பீரங்கிகளைக் கைப்பற்றினோம். பாசுடேல் ஆர்க்கோன் என்னுமிடங்களில்சேர்மனியர் இருமுறைதாக்கியதைத் தடுத்துவிட்டோம், பாய்லேபிரீடர்என்னுமிடம் முழுதும் நமதுவசமாயிற்றென்று பிரான்சிய அறிக்கை கூறுகிறது.

15உ சென்றவெள்ளிமுதல் இன்றுவரையில் 8 பெரியபீரங்கிகளுட்பட 20 பீரங்கிகளையும் 100 மெசின்பீரங்கிகளையும் இன்னுஞ்சிலபீரங்கிகளையும் கைவசப்படுத்தினோம். 100 சேர்மனிய உத்தியோகஸ்தரையும் சிறைப்படுத்தினோமென்று பாரிஸ அறிக்கைகூறுகிறது.

சௌசெஸ் கிராமத்தினருகே பல சேர்மன் அரணகள பிரான்சரால்பிடிக்கப்பட்டன. வைசன்சுபவனத்தாக்கில பலசேர்மன்அரண்களையும் கொத்தளங்களையும் அழித்துவிட்டனர்.

16உ கெட்சட்ஸ்கிராமத்திற்கு முன்னிலையில் பலஅரண்களையும் ஸ்ரீக்னிஸ் டிரேட்டின் ஒருபாகத்தையும் பிடித்துக்கொண்டு சேர்மனியரை நோக்கியடித்தோம். 50 போர்வீரரையும் 3 மெசின்பீரங்கிகளையும் கைப்பற்றினோமென்று பரீஸ் அறிக்கைகூறுகிறது.

இப்பிரீசுக்குக்கிழக்கே சேர்மனியர் உக்கிரமாய்த்தகர்த்ததால் போர்முனையில் சிலஅரண்கள் அழிக்கப்பட்டுப்போயின. அதனால் அவைதிருத்தியமைக்க வேண்டியதாயிற்று. பின்பு போர்முனைமுழுவதையும் ஸ்திரப்படுத்திவிட்டோமென்று ஜான்பிரான்ச கூறுகிறார்.

17உ கிரிடோர் பெல்பேர்ட் என்னுமிடத்தைச்சுமத்தியில் சேர்மன்போர்முனை பிணைக்கப்பட்டது. 600 யார்நீளமான போர்முனையில் இரண்டொரு அரண்கள் பிடிபட்டன, தெற்கே ஏரியிலிருக்கினதால் 1200 யார்நீளமுள்ள அரண்கள் வசமாயின மேலும்தெற்கே வெடிகுண்டுகளை வைத்து வெடிக்கச்செய்து 600 யார்தூரமுள்ள அரண்களைக் கைப்பற்றினோம். ஒருதெருவைத்தாண்டிப்போய் சேர்மன் போர்முனைக்குள் ஒருமைல்தூரம்வரை முன்சென்றோம் என்றுசார்ஜான் பிரான்சின் அறிக்கைகூறுகிறது.

சாம்பெய்னின் ஒருகிராமத்தில் பிரான்சின் முதல்வரிசை அரண்களின்பின் சுரங்கம்வைத்து வெடிக்கச்செய்து 8 படைவகுப்பார் தாக்கி சித்தியடைந்துபெற்றனர், ஆயினும் இருமுறை எட்டினதால் அவ்விடத்தை வசப்படுத்தினோம். அரண்களில் 1500 சேர்மனியர் பிணமாய்க்கிடந்தனர். 12 உத்தியோகஸ்தருட்பட 677 சேர்மனியரைக் கைதிசெய்தோமென்று பரீஸ அறிக்கைகூறுகிறது.

18உ பெல்ஜியத்தில் நமக்குநேற்றியதிகரித்து வருவதால் தமக்குப்பாதகம்நேரிடுமென்று ஈசர்காலுவாய்க்குமேற்கே தங்களுக்கு மிகுந்திருந்த இடங்களைச் சேர்மனியர் காலிசெய்துவிட்டனர்,

லாபிக்குவடக்கே பிரித்தானியர் சேர்மனியருக்கு அதிகசேதம்விளைத்தனர்.

ருந்த செர்மன் படைவகுப்பொன்று பிரித்தானியசெர்மனிய பீரங்கிப்பிரயோகத்துக்கிடையிலகப்பட்டு அர்த்தாசமாயின. ஆயிரம்வீரையும் மெஷின்பீரங்கிகளையும் பிரித்தானியர் கைப்பற்றினர்.

வைலிஎன்னுமிடத்திலுள்ள காட்டிலிருக்கும் செர்மனியரை இன்றுகாலைதாக்கிப் பலவசர் மண்டலத்தையும் மூன்று மெஷின்பீரங்கிகளையும் 250 போர்வீரரையும் கைப்பற்றினோம்.

சிகிப்போரில் இரண்டுமைல் நீளமுள்ள போர்முனையிலுள்ள அரண்களெல்லாம் பிடிபட்டன. பலர் நம்மைச்சரணடைந்தனர். 550 பேர் பகதேசபந்தில்வைக்கும்படி அனுப்பப்பட்டனர்.

கலேகர்மேல் ஒருசெப்பிளின்பறந்து குண்டுகளைப்போட்டது. சிலகுழந்தைகள் இறந்தனர். அக்கச்செப்பிளின் பீரங்கிப்பிரயோகத்தால் பழுதடைந்து டன்கர்க்கருக்கு இரண்டுமைலுக்கப்பால் விழுந்து உடைந்தது. அதிலிருந்த 40 பேர் கைதியாயினர்.

பெல்சியத்தின் போர்முனையில் இரண்டாயிரம் பிரேதங்களையும் அனேகதுப்பாக்கிகளையும் செர்மனியர் போட்டுவிட்டுப்போயினர்.

செர்மனியர் பீரங்கிகளாலும் குண்டுகளாலும் சர்த்தபின்பு உக்கிரமாய்த் தாக்கமுயன்றும் தடுத்துவிட்டோம்.

அருசக்குவடக்கே இரவும்பகலும் பீரங்கிச்சண்டைநடக்கிறது. அருசைத் தகர்ப்பதிலேயே செர்மனியர் கண்ணுயிருக்கின்றனர்.

சென்றவாரம் இப்பிரிஸ்நகரைப்பிடித்தக்கலேநகருக்குப்போவதாகச் செர்மனியர் மிகுதியாய்த் தாக்கியதைப் பிரித்தானிய சேனைகள் தடுத்துநின்றன. அதனால்போர்முனை சிறிதுவளைந்துபோனதாயினும் பிளந்துபோகவில்லை. அதில் நமக்கு மிகுசேதம், அதற்கு ஈடுசெய்துவிட்டோம். அனேகசேனைகள்கொண்டுவந்து போர்முனை பலப்படுத்தப்பட்டது. ஆர்ஸ் என்றநகரின் சரிவுகளை நாம்தகர்த்துப் பலனடைந்தோம். ஆனால் அவ்வரண்களை அழிக்கவேண்டியளவு பலமானகுண்டுகள் நம்மிடமில்லாததினால் நமக்குமிகு சேதம் சேர்ந்தது. ஆயினும் நாம் முன்சென்றுகொண்டிருக்கிறோம்.

21உ கடுமையான பீரங்கிச்சண்டை நடந்தது. இரண்டு செர்மனவிமானம் சுட்டுவீழ்த்தப்பட்டன.

ருசியசெர்மனிய ஆஸ்திரியயுத்தம்.

௮உ விஸ்டுலாநதிக்கும் கார்ப்பேதியன் மலைக்கும் மத்தியிலுள்ள போர்முனையில் கடுமையானசண்டைநடக்கிறது.

விஸ்டுலா நதிக்கரையிலுள்ள ருசியரைப்பின்தள்ளிப் பலஇடங்களில் அந்நதியைத்தாண்டி டுக்ளா கணவாயைப்பிடித்து அதற்குச்செல்லும்தெருவையும் வசப்படுத்தினோமென்று செர்மனியரும் டார்னோசர் தம்வசமாயிற்றென்று ஆஸ்திரியரும் சொல்லுகின்றனர்.

லிபாநகர்செர்மனியர் வசமாயிற்று. அதைத்தகர்த்த செர்மன்கப்பலொன்று கரக்கத்திறப்பட்டுமூழ்கிவிட்டது.

மிடாவுக்குத்தென்மேற்கே நாம்முன்சென்றிருப்பதுடன் சானிஸ்கிஎன்றபலமான இடத்தைச்செர்மனியர் விட்டுப்போகும்படியும் செய்துவிட்டோம். அப்பொழுதுமிகுதியான சாமான்களைச் செர்மனியர்போட்டுவிட்டுப்போயினரென்று ருசியஅறிக்கை கூறுகிறது.

டுக்ளாக் கணவாயைநோக்கி ருசியபடைவகுப்பொன்று பின்வாங்கும்போது அதைச்சத்துருக்கள் சூழ்ந்துகொண்டனர். ஆயினும் தீரமானபோர்செய்து அப்படைவகுப்பு திரும்பிச்சென்றது.

விஸ்டுலா நகரைநோக்கித் தாம்முன்செல்வதாகச்செர்மனியர் சொல்லுகின்றனர். மேசோலெபோலீஸ் என்னுமிடங்களுக்கருகில் ௯ முறைசெர்மனியர் உக்கிரமமாய்த் தாக்கியதை கட்டிகொண்டுஎதிர்த்தடித்து விட்டதாக ருசியர்சொல்லுகின்றனர்.

௪உ கெயிடனி பெயஸ்கோ என்னுமிடங்களில் நமதுபடையைவளைந்துகொண்ட சத்துருக்குதிரைப்படைகளை நமதுகுதிரைப்படைதாக்கி வெகுதூரம் பின்தொடர்ந்துசென்றது.

கலிஷியாவின்மேற்குப்பாகத்தில் பிடிவாதமானசண்டைநடந்தபின் விஸ்லோகாநதியைக் கிரோஷோஎன்றஇடத்தில் சத்துருக்கள் தாண்டிவந்துவிட்டனர் என்று ருசியசெய்தி கூறுகிறது.

கலிஷியாவுக்குச் செர்மனியசக்கிரவர்த்திபோய் அங்குநடந்த போரொன்றைப் பார்வையிட்டனர். அதில் பிரஷியன்காட்ஸ் என்றபடைவகுப்புச்சேர்ந்திருந்தது.

சாவோர்னிக்மலைகளில் சத்துருக்கள் கூட்டமாய் நின்றுதாக்கினர். நமது காலாட்படை அரண்களைவிட்டு முன்சென்றபோது சத்துருக்கள் குண்டுமாரிபொழிந்தனர். என்றாலும் நமதுசேனைகள்முன்சென்று அவர்கள்மேல் நெருப்பைவாரிக்கொட்டி எவ்விடத்திலும் எதிர்த்தடித்துவிட்டனர்.

சாவிலிஸ் கிராமத்தருகே பிடிவாதமானசண்டைநடந்தபின் அங்கிருந்த நமதுபடைவகுப்பொன்றை நீஸ்டர்நதியின் இடதுகரைக்குப் பின்வாங்கும்படி சத்துருக்கள்செய்தனர். ஆயினும் நமதுமுன்னணிகள் நதியைத்தாண்டிப்போய்ச் சாபோருகி என்ற இடத்தின் போர்முனையிலும் வேறிடத்திலுஞ் சத்துருக்களைத்தாக்கி ௧௧00 பேரை மதியற்படுத்தினரென ருசியஅறிக்கை சொல்லுகிறது.

நாம் கார்ப்பேதியன்மலை உச்சியைக்கடந்து ருசியரைப் பின்தொடர்ந்தோம், கக்கேசியை [illegible]த்துவிட்டோம் என்று ஆஸ்திரியர் கூறுகின்றனர்.

௪உ கலிஷியாவின் மேற்குப்பக்கத்தில் ருசியர் திருப்பியடிக்கப்பட்டனர். செர்மனியரும் ஆஸ்திரியரும் ௯0 மைல்தூரமான முன்னிழந்தபூமியை மீட்டுவிட்டனர்.

ருசிய பால்டிக்மாகாணத்தின்மேல் படையெடுத்துச்சென்ற ஒருபகுதியை செச்சினஉன்னும்புகைரதஸ்தலமேற்கருகில் தாம் தோற்கடித்துவிட்டதாயும் சாவோர்னிக்மலைகளில் சத்துருக்களைக் கடுமையாய்த்தாக்கிவருகிறோமென்றும் சத்துருக்களில் ௫000 பேர் மாண்டுபோயினரென்றும் ருசிய அறிக்கை கூறுகிறது.

செர்னோவிட்ஸமுதல் ஒபர்டின்வரை ௪0 மைல்நீளமான இடத்தில் நாம் வெற்றியுடன்முன்சென்றோமென்றும் ௫000 போர்வீரரையும் ௯ பீரங்கிகளையும் கைப்பற்றினோமென்றும் நீஸ்டர்நதியின் இடதுகரைமுழுவதையும் சத்துருக்கள்விட்டுப் போய்விட்டனரென்றும் விஸ்டுலாவுக்கும் கார்ப்பேதியனுக்குமிடையில் நமக்கு அபசெயமுண்டாயிருக்கிறதென்றும் ஆயினும் சத்துருக்களின் வைப்பக்கஅணிகளை நாம் உக்கிரமாய்த்தாக்கி அவர்களின் முன்னேற்றத்தைத்தடுத்து ஆபத்திலிருந்த நமதுதருப்புகள் பின்னிட்டுத் தக்கஇடத்திற்குப்போகச் செய்துவிட்டோமென்றும் ருசியஅறிக்கைகூறுகிறது.

௧௪உ விஸ்டுலாவுக்கும் கார்ப்பேதியனுக்குமத்தியில் ருசியரை ஆஸ்திரிய செர்மனியர் இன்னுந் தாக்கிக்கொண்டிருக்கின்றனர். ஸடிரிகெப்பாவில் அவர்கள்தாக்கியதை எதிர்த்தடித்துவிட்டு ருசியர் தமக்கென்று விதிக்கப்பட்டவிடத்திற்குப் பின்சென்று அங்குதங்கினர். புகோவினவில் நீஸ்டர்நதியின் வலக்கரையில் ருசியர் முன்னேற்றமடைந்துவருகின்றனர். பால்திக்மாகாணத்தில் ஷாவ்லிநகரவசப்படுத்தியசெர்மனியரைருசியர்தாக்குகின்றனர்.

கலிஷியாவில் கிழக்குநோக்கிச் சத்துருக்கள் முன்செல்லும்வேகங் குறைந்துவருகின்றது. ரிஸ்மில் கோட்டையைநோக்கிப் பாதிதூரம் ருசியர் பின்வாங்கிவிட்டனர். ஆயினும் லுப்கோகணவாயும் அதனூடேசெல்லும் ரெயில்பாதையையும் இன்னும் அவர்கள் காத்திருக்கக்கூடும்.

௧௪உ பால்திக்மாகாணத்திலுள்ள சாவ்லியில் ௪000 செர்மனியரைக் கைதியாக்கினதுடன் ௯ மெஷின்பீரங்கிகளையுங் கைப்பற்றினோம். புகோவினவில் பின்டிரிட்சாருதல் ருமேனியாவாட்டின் எல்லையில் அரண்படுத்தியிருந்த இடங்களை ஆஸ்திரியர் காலிசெய்துவிட்டுப் பின்வாங்கினர். அத்தருணம் ஆஸ்திரியகுதிரைப்படை காத்துநின்றது. நமது பீரங்கிப்பிரயோகத்தால் அப்படை தோற்கடிக்கப்பட்டது. நமதுகுதிரைப்படை பலஇடங்களில் போர்முனையைப்பிளந்துசென்று ஆஸ்திரியபடைகளைத் தோற்கடித்துவிட்டதென்றும் இன்னும் அனுகூலத்துடன் அவர்களைப் பின்செல்லுகிறோமென்றும் ருசியஅறிக்கை கூறுகிறது.

செர்மனியசேனைகள் சான் என்னும்நதியைத்தாண்டி ரிஸ்மில்கோட்டையைச் சமீபித்துவிட்டது.

செர்மனியர் பால்திக்மாகாணத்தில் ஷாவ்லியை மறுபடி பிடிக்கும்படி தாக்குகிறார்கள். அதை ருசியர் தடுக்கிறார்கள்.

௧௪உ கக்கேசியிலிருந்து ஒழுங்காகருசியர்பின்வாங்கிவிட்டதாகச் செய்திவருகிறது.

௧௪உ ரிஸ்மில்கோட்டைகளுக்கு முன்னே தமது முன்னணியிருப்பதாயும் தமது போர்முனையின் இருபக்கத்திலுமுள்ள ருசியசேனைகள் பின்வாங்கிச்செல்வதாயும் செர்மனியஅறிக்கைகூறுகிறது.

ருசியர்பின்னிடுவதைஒப்புக்கொண்டுகுறுகலான போர்முனையிலிருக்க வேண்டிச் சான்நதிக்கரையில் தமதுசேனைகள் கூட்டப்படுகின்றதென்று சொல்லுகிறது.

கலிஷியாவின் கிழக்குப்பக்கத்தில் ருசியர் முன்சென்று புகோவினமாகாணத்தின் புருத்நதியின் குறுக்கே ஆஸ்திரியரைப் பின்தள்ளுகின்றனர்.

௧௮உ புகோவினவில் ஆஸ்திரியர் நன்றாய்த் தோற்கடிக்கப்பட்டதினால் கலிஷியாவில் அவர்களடைந்தவெற்றி பிரயோசனப்படாது. நீஸ்டர்நதிமுதல் புருத்நதிவரையுள்ள இடங்கள் நமதுவசமிருக்கிறது. ௪00 மைல்நீளத்தில் பந்தோபஸ்துச்செய்திருந்த தம்மிடங்களைக் காலிசெய்துவிட்டு ஒழுங்கீனமாய் ஆஸ்திரியசேனை பின்செல்கிறது. செர்னோவிட்ஸ்நகர் முன்னமே நமதுவசமாய்விட்டது. நமது குதிரைப்படை ஆஸ்திரியபடைகளைத் தாக்கிக்கொண்டிருக்கிறது. புகோவினவில் நாம் கவனஞ்செலுத்தவேண்டியஇடம்கொலோமியாவே. அது ஓர் முக்கியமான புகைரதச்சந்தியாதலால் அவ்விடத்தில் ஆஸ்திரியா தனைச்சேனைகளைச்சேர்த்து பிடிவாதமாய்ப் போர்செய்துவருகின்றனர். அங்கும் ஆஸ்திரியரைச்செயித்துவிடுவோமென்று ருசியஅறிக்கை கூறுகிறது.

சாவ்லியில் புபிசாநதியைத்தாண்டிச்சென்று செர்மனியரின் அரண்களைத்தகர்த்துப் போர்வீரரையும்பிடித்திருக்கிறோம். ஒபாடோவில் அவர்களை எட்டுமைல்தூரம் பின்தள்ளிவிட்டோம். கலிஷியாவின் போர்முனைநெடுகவும் ரிஸ்மிலுக்கு வடகிழக்கிலுந் தெற்கிலும் சத்துருக்கள் பலமாய்த்தாக்கினர். விஸ்டுலாநதிக்கு இடப்பக்கத்தில் ௯000 போர்வீரரையும் பலபீரங்கிகளையுங் கைப்பற்றினோம்.

ரிஸ்மில்நகரில் மேற்குப்பக்கக் கோட்டைகளைச் சத்துருக்கள் தகர்க்கின்றனர். இரும்புக்கம்பிவேலிபோட்டவிடங்களில் கூட்டங்கூட்டமாய்ச் சத்துருக்கள் நாசமடைந்தும் நமது இரண்டுபடைவகுப்பின் அரண்களை அவர்கள் கைவசப்படுத்திவிட்டார்கள். சத்துருக்களுக்குப் பதினாயிரக்கணக்கான சேதமுண்டென்று ருசியஅறிக்கை கூறுகிறது.

௨0உ ஒபடோவில் பெலமான சத்துருக்களை நாம் நெருக்கியதினால் இவான்சிகா என்றஇடத்துக்குப்பின்னே அவர்கள் போய்விட்டனர். அவர்களை உக்கிரமாய்ப் பின்தொடர்ந்தோம்.

சரோஸ்லாவ் வெசாகோ என்னும்பகுதியில் சான்நதியின் வலக்கரையில் செர்மனியர் நிலைபெற்றுவிட்டனர். அதற்குத்தெற்கே அந்நதியின் இருபக்கமும் நாம் தங்கியிருக்கிறோம்.

கலிஷியாவின் கீழ்ப்பாகத்தில் டில்டின் கொலோமியாநகரங்களுள்ளபகுதியில் ஆஸ்திரியர் களைத்துப்போயினர். நாம் கைதிகளையும் சாமான்களையும் பிடிக்கிறோமென்று ருசிய அறிக்கை கூறுகிறது.

௨௧உ ரிஸ்மிலுக்குவடக்கே செர்மனியருக்கு அதிகசேதமாயினும் அதைப்பாராமல்பண்ணுமலவொன்நதியின் கிழக்குப்பக்கத்தில் நிலைபெறமுயற்சிசெய்துகொண்டிருக்கின்றனர். நீஸ்டர்நதியின் சதுப்புநிலங்களுக்கிடையில அதிகசேதமனுபவித்தும் ருசியரின் இரும்புக்கம்பிவேலியைச் செர்மனியர் நெருங்கி இரண்டு அரண்களையும் பிடித்தனர். பதினாயிரக்கணக்கானசேதம் செர்மனியருக்கு ஏற்பட்டிருக்கிறது.

கலிஷியாவின்மேற்குப்பாகத்தில் ருசியர்பின்னிட்டதினால் கார்ப்பேதியன்மலையின் லுபாகணவாயிலிருந்தும் அவர்கள் பின்வாங்கவேண்டியதாயிற்று. கார்ப்பேதியன்மலையின் கிழக்குப்பக்கத்திலிருந்து ரிஸ்மில்நகரம்வரையில் ருசியர் பலமாய் அணிவகுத்துநிற்கின்றனர் என்று லோட் கிச்னர் தெரிவித்தார்.

துருக்கி யுத்தம்.

௧0உ டார்டனெல்ஸ்சலசந்தியில் மிகவும் குறுகலானஇடத்தில் இதுவரையில் அடக்கப்படாதகாராகோட்டையைச் சண்டைக்கப்பல்கள் தகர்க்கின்றன.

கிலிப்சார்கோட்டையும் அருகிலுள்ள குன்றுகளையும் சேனைகள் வசப்படுத்திவிட்டன. டார்டனல்ஸ்சலசந்தியில் மெஸ. ஆஸ்குவித்தின் மூன்[illegible]குமாரர் காயப்பட்டிருக்கிறார். ஜெனறல் டா[illegible]ட் என்னும் பிரான்சுத்தலைவர் டாடனல்ஸ் சந்தியில் சுகவீனமாயிருக்கிறார். அவருக்குப்பதிலாய் கௌரணட் என்னும் பேர்பெற்றஜெனரல் நியமிக்கப்படுவார்.

ஆஸ்திரேலியன் சப்மரைனின் மார்மோராக்கடலுக்குட்புக முயன்றபோது துருக்கிச்சண்டைக்கப்பல் அதைஅமிழ்த்திவிட்டதென்றும் அதிலிருந்த உத்தியோகஸ்தரும் 29 மாலுமிகளும் கைதிசெய்யப்பட்டிருக்கிறார்களென்றும் துருக்கிய அறிக்கை கூறுகிறது.

[illegible]ப்போலியிலுள்ள துருக்கரின் ஸதலங்களில் குண்டுப்பிரயோகஞ்செய்து கிரிதியாஎன்றகுன்றுக்கருகில் பலமாகிய அரண்களை ஐக்கியசேனைகள்பிடித்து அரண்செய்துகொண்டனர். அங்கிருந்த துருக்கர்தாக்கியும் பின் உக்கிரம் குறைந்துபோயிற்று. சண்டைக்கப்பல்களும் ஆஸ்திரேலியதருப்புகளும் உதவிசெய்தன. அங்கிலோசேனைகள் கைவசப்பட்டஸ்தலங்களைப் பலப்படுத்தினர். பிரான்சுத்தருப்புகள் இடப்பக்கத்தில் துருக்கரைநெட்டியதால்தாக்கி முக்கியமான இடத்தைப்பிடித்தனர்.

12உ கருங்கடலிலுள்ள ருசியகடற்படை 10உ போஸ்பரஸ்கோட்டைகளைத்தாக்கிற்று. கோபன் கப்பலும் [illegible]து. கோபனும் ருசியகப்பல்கள்மேல் பீரங்கிபிரயோகித்துவிட்டு ஓடிவிட்டது.

கோலியாத் என்ற பிரித்தானியசண்டைக்கப்பல் இரவு சலசந்தியின் தலைப்பிலிருந்து பிரான்சியசேனைகளின் பக்கப்படைகளைக் காத்திருக்கையில் அக்கப்பலை துருக்கிய டிஸ்திரோயர்க்கப்பல் தாக்கின டோர்பிடோ வெடியால் மூழ்கிவிட்டது. அதில் 500 பேர்வரையில் சேதமுண்டாயிருக்குமென நம்பப்படுகிறது. அதிலிருந்த 20 உத்தியோகஸதரும் 160 மாலுமிகளும் காக்கப்பட்டனர். இக்கப்பல் 12 ஆயிரத்து 950 டன் நிறையுள்ளது. 1900 ம் வருடம் செய்துமுடிந்தது. அதில் 12 இஞ்சுப் பீரங்கிகள்நான்கும் 6 இஞ்சுப்பீரங்கிகள் 12 ம் வேறுசில சிறியபீரங்கிகளுமிருந்தன. மணித்தியாலம் 21 மைல்வரையில் போகக்கூடியது. அதில் உத்தியோகஸதரும் மாலுமிகளுமாக 700 பேர் இருந்தனராம்.

21உ ஜெனரல் காக்ஸ் என்பவரின் கீழுள்ளபடைவகுப்பு தங்கியிருக்கும் ஸதலத்தை துருக்கர் தாக்கியும் மிகுசேதத்துடன் திருப்பியடிக்கப்பட்டனர்.

அடுத்தநாளில் இரண்டுகூர்க்கப்படைவகுப்பு அரைமைல் தூரத்துக்குமேல் முன்சென்றன. அவ்விடத்தைப்பிடிக்கத் துருக்கர்முயன்றும் பலன்படவில்லை. 17உ பீரங்கிச்சண்டையில் ஆகாயவிமானங்களின் உதவியைப்பெற்று நமதுபீரங்கிப்படை துருக்கியரின் அரண்களையும் பீரங்கிமேடைகளையும் தாக்கிப்பலன்பெற்றது.

கடற்சங்கதி.

௮உ ரூரே என்னுங்கப்பலை ஸகொத்லாந்துக்கப்பால் U ௧௧ என்ற செர்மன்சப்மரைனின் அமிழ்த்திவிட்டது. அதிலிருந்தசனங்கள் காப்பாற்றப்பட்டனர்.

[illegible]டேட் என்னுங்கப்பல் ஐரிஷ்கடலிலே எச்சரிப்பின்றி அமிழ்த்தப்பட்டது. சனங்கள் காப்பாற்றப்பட்டனர். லிவர்ப்பூலிலிருந்து தென்னபிரிக்காவுக்குப்புறப்பட்ட வெஞ்சூரியன்கப்பலும் ஐரிஷ்கடலில் ஆழ்த்தப்பட்டது. அதிலிருந்த சனங்கள் காப்பாற்றப்பட்டனர்.

இவையுடன்முடிந்த ஒருவாரத்தில் ௧௪000 டன் நிறையுள்ள பிரித்தானிய வியாபாரக்கப்பல்கள் ஐந்தையும் ௬000 டன்நிறையுள்ள மீன்பிடிக்கப்பல்கள் பதினைந்தையும் செர்மனிய சப்மரைன்கள் ஆழ்த்தின. அவ்வாரத்தில் ௧௬0௪ கப்பல்கள் பிரித்தானிய துறைமுகங்களுக்கு வந்துபோயின.

பெல்சியகடற்கரைக்கப்பால் நடமாடிக்கொண்டிருந்த மெயோரியென்னும் பிரித்தானியடிஸ்திரோயர் ௩உ ஒருசுரங்கத்திலபட்டுடைந்துபோயிற்று. அதிலிருந்தசனங்கள் படகிலிறங்கினர். கிருசேடர் என்னும் டிஸதிரோயர் அதிலுள்ளவர்களைக் காப்பாற்றமுயன்றபோது செர்மன் தரைப்பீரங்கிகள் குண்டுகளைப்பிரயோகித்ததினால் கிருசேடர் அதன்படகுகளையும் விட்டுவிட்டுப் பின்வாங்கின. மெயோரிக்கப்பலிலிருந்த மாலுமிகளும் கிருசேடர்க்கப்பலிலிருந்துபடகுகளிலிறக்கப்பட்ட ஏழுஉத்தியோகஸதரும் அறு மாலுமிகளும் சிறைபிடிக்கப்பட்டு ஸீப்ரக்நகருக்குக் கொண்டுபோகப்பட்டார்களென்று செர்மன் அறிக்கை கூறுகிறது.

௩உ பாஸ்பரஸ் சலசந்திக்கு வெளிப்புறத்தில் ௪ துருக்கிக்கப்பல்களையும் மார்மோராக்கடலில் எப்படியோ ௨ துருக்கிக்கப்பல்களையும் ருசியர் மூழ்கடித்துவிட்டனர்.

௮உ க்வீன்வில்கெல்மினா என்னுங்கப்பல் வடகடலில் அமிழ்த்தப்பட்டுப்போயின. ஒருசப்மரைனின் குண்டுகளை மிகுதியாய் அதன்மீது பிரயோகித்து படகுகளில் சனங்களை இறங்கும்படி உத்தரவுசெய்யப்பட்டபின் டொர்பிடோ பிரயோகிக்கப்பட்டது. ஒன்றுதவறிவிட மற்றவெடிதாக்கிற்று.

௮உ பார்படோஸ, கொலம்பியா, மியூரா, சவாஸட் என்னும் சிறியயுத்தக்கப்பல்களை ௯உ இரண்டு செர்மன் டொர்பிடோப்படகுகள் தாக்கின. [illegible] நிமிஷச் சண்டையின்பின் செர்மன்படகுகள் [illegible]டின. நமது டிஸ்திரோயர்க்கப்பல்கள் அப்படகுகளைப் பின்தொடர்ந்து அழித்துவிட்டன. கொலம்பியா என்னும் பிரித்தானிய யுத்தக்கப்பலும் அமிழ்த்தப்பட்டுப்போயிற்று. அதிலிருந்த ௧௧ உத்தியோகஸ[illegible]ம் மாலுமிகளும் மூழ்கிப்போயினர். ஒருமா[illegible]ன் காப்பாற்றப்பட்டான்.

[illegible] லண்டனுக்குப்போன கொலோனி என்னுங்கப்பற்றலைவர் தாம் ஒரு சப்மரைனுடன் மோதிக்கொண்ட அதிர்ச்சியுணரப்பட்டதென்றும் சற்றுநேரத்தில் எண்ணெய் நீரின்மேல்மிதக்கக் கண்டதென்றும் ஆதலால் சப்மரைனின் முழுகியிருக்கவேண்டுமென்றும் அவ்விடத்தில் அன்று மீன்பிடிக்குங்கப்பல்கள் அமிழ்த்தப்பட்டிருக்கின்றனவென்றுங்கூறுகின்றனர்.

[illegible] கார்ன்வாலுக்கப்பால் டிராம்பிசென்ற பிரித்தானியகப்பல்மேல் செர்மன் சப்மரைன் டொர்பிடோவெடியைப் பிரயோகித்தது. அதனால் அதிகசேதமேற்படாமையால் நோர்வேதேசக் கப்பலொன்று அதைக் கட்டியிழுத்துச்சென்றது. சப்மரைனின் [illegible]ரும்பிவந்து அக்கப்பலை அமிழ்த்திவிட்டது. நோர்வேக்கப்பல் தப்பிப்போய்த் திரும்பிவந்துபிரித்தானியமாலுமிகளைக்காப்பாற்றியது.

௨0உ டம்பிரிஸ்கப்பலும் ஐரிஷ்கடலில் டொர்பிடோவெடியால் தாக்கப்பட்டுப்போயிற்று. அதிலிருந்த மாலுமிகளில் மூவர் மூழ்கிப்போயினர்.

௨0உ ஜுசான் கிரைசோலைட் என்ற இருமீன்பிடிக்குங்கப்பல்களை ஒரு சப்மரைன் வடகடலில் அமிழ்த்திவிட்டது.

இங்கிலாந்து.

18உ கடற்படைப்பகுதித்தலைவரான லோட் பிஷர் தமது உத்தியோகத்திற்கு இரண்டுநாட்களாய் வராமலிருந்து சனிக்கிழமை மெஸ. ஆஸ்குவித்மந்திரியாருடன் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார். யுத்தபாடங்கள் தயாரிக்குமிடங்களை மெஸ. லாயிட்ஜியார்ஜ் போய்ப்பார்க்கவில்லை. ஆசவால் இராசரிக நிலையைக்குறித்து இன்று பார்லிமெந்தில் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

லாட்பிஷர் இராசிநாமாச்செய்ததினால் நெருக்கடியான நிலைமைநேர்ந்ததாகச் சொல்லப்படுகிறது.

கடற்படைத்தலைவரான இருவருக்கும் மெஸ் சார்சிலுக்கும் அபிப்பிராயபேதம் நேர்ந்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. எல்லாக்கட்சித்தலைவருமடங்கிய ஒற்றுமையுள்ள அரசாங்கம் ஏற்படும், யூனியனிஸ்டுக் கட்சித்தலைவர்மூவர் மெஸ. ஆஸ்குவித்தைக் கண்டுபேசினர். மெஸ. பால்பர் மெஸ. போர்னல்லா, மெஸ. ஆஸ்டின், செம்பர்லின், மெஸ. எவ் ஈ. ஸ்மித், லோட் டர்பி ஆகியவர் மந்திரிசபை அங்கத்தவராவராம் தற்போது மந்திரசபையிலுள்ள லோட் ஹால்டேன், லோட் பீசாம்ப், லோட் லூகாஸ், மெஸ். காகோட், மெஸ. பிர்ரேல் ஆகியவர் சபையிலிருந்து விலகிவிடுவார்களாம், கடற்படைப்பகுதிமந்திரி உத்தியோகத்திலிருந்து மெஸ. சர்சில் விலகிக்கொள்வர். ஆயினும் மந்திரிசபையை விட்டுவிலகாராம். கடற்படைப்பகுதியின் தலைமையை மெஸ. பால்பர் வகிப்பரென்று சொல்லப்படுகிறது.

19உ காமன்சபையில் மெஸ. ஆஸ்குவித்பேசியபோது அரசாட்சியில் என்னமாறுதலேற்படினும் அவைகளால் முதல்மந்திரி எட்வேட்கிரே அவர்களின்பதவிக்குப் பாதகமேற்படாது. யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதில் எவ்வித மாறுதலுமில்லை. யுத்தத்தினிமித்தமாக அரசாட்சியைத்திருத்தி அமைக்கப்படுகிறது. அதனால் இராசரிகவிஷயமாய்ப் பார்லிமெந்துசபையார் தமதெண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் தெரிவிக்கநேரிடாதென்பதை எல்லாக்கட்சியாரும் அறிந்துகொள்ளவேண்டும் என்றார். யுத்தத்தை வெற்றியுடன்முடிக்கவே அரசாட்சி திருத்தியமைக்கப்படுவதால் இராசரிக சம்பந்தமாயோ வேறுசம்பந்தமாயோ உள்ளவிஷயங்களை நாமஇச்சமயம் மனதில்வையாமல் விட்டுவிடவேண்டுமென்று மெஸ. போனர்லா பேசினார். இனிப்பிரதிநிதிகள்சபை ஆனி௴ 3உ வரைக்குங் கூடாது.

செர்மனியர் விஷக்காற்றை உபயோகிப்பதால் நாமும் பிரான்சும் அவ்வழிகளை அனுஷ்டித்து நமதுசேனைகளைக் காக்கவேண்டுமென்னும் உணர்ச்சிதோன்றியிருக்கிறது. இன்னும் 3 லட்சம்புதியசேனை கூட்டப்படவேண்டும். 40 வயதுள்ளவர்களும் சேனையில் சேர்க்கப்படுவார்களென்று லோட்கிச்னர் பேசினர்.

விசாரணையிலிருந்த ஒரு செர்மன் வேவுகாரன் மறியல்வீட்டில் நான்றுகொண்டிறந்தான்.

பலஇடங்களுக்குங் குண்டுகள் அனுப்பப்படுவதினால் குண்டுகள்தேவையாயிருப்பதால் விரைவில் தயார்செய்யும்படி முயற்சிசெய்யப்படுகிறது.

பிரித்தானியாவில் செப்பிளின்.

டோவரில் ராமஸ்கேட்நகர்மீது 40 குண்டுகளை எறிந்து மூன்றுபேர்காயமடைந்தனர்,

ஊர்நகருக்கருகில் ஓர்வயலில் 20 வெடிகுண்டுகளைஎறிந்து மூவர்காயமடைந்தனர்.

17உ பிரித்தானியரின் 8 விமானங்கள்தொடர்ந்து செப்பிளினை மூன்றுவிமானம் நெருங்கிப் பீரங்கிப்பிரயோகஞ்செய்தது. பிகவர்த் என்னும்விமானத்தலைவர் செப்பிளினுக்குமேலே 200 அடிஉயரப்பறந்து நாலு வெடிக்குண்டுகளை எறிந்தனர் ஓர் அறையிலிருந்து மிகுந்தபுகைப்படலம் கிளம்பியது. பின்புதன்வால்கீழாய் 11 ஆயிரத்து 600 அடிஉயரம் செப்பிளின்கிளம்பியது. அது அதிகசேதமடைந்திருப்பதாய்க் காணப்பட்டது. நமது எல்லாவிமானங்கள்மீதும் கடுமையாய்ப் பீரங்கிப்பிரயோகஞ் செய்யப்பட்டும் உயிர்ச்சேதம்நேரிடவில்லை.

செர்மனிய தென்மேற்குஆபிரிக்காத் தலைநகர்பிடிக்கப்பட்டது.

தடையின்றிச் சென்றல்போதா விண்டாக்குநகருட்புகுந்து பிரித்தானியகொடியை நாட்டிவிட்டார். 3 ஆயிரம் ஐரோப்பியரும் 12 ஆயிரம் சுதேசிகளுமங்கிருந்தனர், ரயில்வண்டிகளும் அகப்பட்டன.

இத்தாலிய மந்திரசபை கலைந்துவிட்டது.

இத்தாலிய மந்திரசபையார் இராசிநாமாச்செய்துவிட்டனர். அரசர் முதன்மந்திரியாரான செனர்ஸலந்திராவின் இராசிநாமாவை ஏற்றுக்கொள்ளவில்லை. மந்திரிசபையார் தங்கள்பதவியைவகித்துவருவார்கள்,

போர்த்துக்கல்குழப்பம்.

போர்த்துக்கல்லில் குழப்பந்தோன்றிப் போக்குவரவுக்குரிய சாதனங்கள் அறுக்கப்பட்டுப்போயின. முன் முதன்மந்திரியாயிருந்தவர் கொல்லப்பட்டாராம். டாகூலைவருப்பார்சேர்ந்து நகரத்தைத்தகர்த்தனர், பொருட்சேதம் உயிர்ச்சேதம் அதிகம். வாஸ்கோடகாமா என்னும் குருசர்க்கப்பற்றலைவன் கொல்லப்பட்டானென்றும் லிஸ்பன் நகரிலுள்ளசேனைகள் இராசபத்தியுடனிருப்பதாயுஞ் சொல்லப்படுகிறது.

லூசிட்டானியாக்கப்பல்விஷயம்.

௧0உ அமெரிக்காவிலுள்ள செர்மனியதூதர் முன் எச்சரிக்கைசெய்திருப்பதைப் பிரித்தானியஅரசும் அக்கப்பற்கம்பனியும் பரிகாசித்து அலட்சியஞ்செய்ததினால் அக்கப்பலிலுள்ளாரின் நாசத்துக்கு அக்கம்பனியும் அவ்வரசாட்சியுமே உத்தரவாதஞ்செய்யவேண்டுமென்றும் அக்கப்பலிலிருந்தசனங்கள் சேதமானதிற்குச் செர்மனிய சனசமூகமும் மிகுஅனு

தாபம்பாராட்டுகிறதென்றும் ஓர் செர்மன் அதிக்கை கூறுகிறதாம்.

அத்திலாந்திக் சமுத்திரத்திலோடும் பெரிய செர்மன்கப்பலைத் தொலைப்பதற்காக அந்த லூசிடானியா செய்யப்பட்டதினால் அது அமிழ்த்தப்பட்டவிஷயத்தைச் செர்மனியர் திருத்தியுடன் வரவேற்றனரென்று ஓர்செர்மன்பத்திரிகைசொல்லுகிறதாம். செர்மனியில் கொடிதூக்கப்பட்டுப் பள்ளிக்கூடமும் விடுதலைசெய்யப்பட்டுக் கொண்டாடினார்களாம்.

லிவர்ப்பூல்சனங்கள் மிகு கோபாதிரராய் அந்நகரிலிருந்தசெர்மனியகடைகளைநாசமாக்கிவிட்டனர்.

லூசிடானியா புறப்பட்டபின் அதில் மூன்றுசெர்மனியரிருக்கக்கண்டு மூவரும் விலங்கிட்டுவைக்கப்பட்டிருந்தார்களாம்,

௧௨௨ லூசிடானியாவில் ௧௨௮ அமரிக்கர் மூழ்கிப்போயினர்.

செர்மனியரின்மேல்ஆத்திரம்பொங்கி லண்டனிலுள்ள செர்மனியர் துரத்தப்படுகிறார்கள். பெருமைபேசிய செர்மன் வைத்தியனொருவன் தொந்தரவுக்குள்ளானான். செர்மன் கடைகளுக்குவிரோதமாய்க் கலகங்கிளம்பினமையால் பொலிசரும் சேனைகளும் அழைப்பிக்கப்பட்டனர். நேற்றிரவு பலபொலிசர் காயப்பட்டதினால் கலகத்தையடக்க முடியவில்லை.

௧௨௨ நேற்றிரவு மறுபடிகலகங்கிளம்பிக் கடைகள் கொள்ளையடிக்கவும் நாசமாக்கவும்பட்டன. அக்கடைகளிலிருந்தவர்கள் குரூரமாய்நடத்தப்பட்டார்கள். செர்மனியர் பலர் தம்கடைகளைப் பந்தோபஸ்துச்செய்துவிட்டு அதற்குமுன் ஓடிவிட்டனர். கலகக்காரரில் மிகுதியானோர் வாலிபரும் சிறுபெண்களுமாம். அவர்கள் எறிந்த ஆயுதங்களாற் பொலிசர் காயப்பட்டனர். பொலிசருக்கு யுத்தவீரரும் உதவிசெய்தனர். லிவர்ப்பூலில் மறுபடி கலகம்நடக்கவில்லை. அங்குள்ள பல செர்மனியரை அதிகாரிகள் கைதுசெய்து கட்டுக்காவலில் வைத்தனர். ௨௦௦ கடைகளுக்குமேலே முன்டசேதமாக்கப்பட்டன. லூசிட்டானியா விஷயத்தில கோபமபொங்கினதினால் பிறர்செய்யும் அக்கிரமங்களுக்காக நிரபராதிகள் ஆபத்துக்குள்ளாகநேரிடுவது துக்கமானகாரியமென்று காமன்ஸ்சபையில் மெஸ, ஆஸ்குவித் பேசினார்.

செர்மனியர் அமரிக்காவுக்குத்தெரிவித்தபதிலில் பிரித்தானிய வியாபாரக்கப்பல்களில் பீரங்கிகளேற்றப்பட்டு அவைகள் எங்கள் சப்மரையின்களை அழிக்கின்றன என்றும் அக்கப்பலில் வெடிக்குண்டுகளடங்கிய ௪௨௦௦ பெட்டிகளிருந்தனவென்றும் கப்பலுக்கு ஆபத்தநேருமென நாங்கள் எச்சரிக்கைகொடுத்ததை அமரிக்கர்நம்பாமல் பத்திரமாய்க்கொண்டுபோவோமென்று அங்கிலேயர்சொன்னதை நம்பினதற்குத் தாம் வருத்தப்படுகிறதாயும் செர்மனி தெரிவித்திருக்கிறதாம்.

முன்பு லூசிடானியா பிரயாணிகளைஎச்சரித்தது போலவே இப்பொழுது இங்கிருந்துபுறப்படும் டிரான்சில்வேனியாக் கப்பற்பிரயாணிகளுக்கும் எச்சரிக்கைகொடுக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் பிரயாணிகள் விஷயத்தில் எச்சரிக்கைபலிக்கவில்லை.

௧௨௨ அமரிக்க ஐக்கியஅரசாட்சியார் செர்மனிக்கு ஓர் அறிக்கையையனுப்பினர். அமரிக்கரின்உரிமைகளைமீறிநடந்ததற்கும் அமரிக்கர் சேதமானதற்கும் நியாயஞ்சொல்லவேண்டுமென்றும் இனி இம்மாதிரிச் சம்பவம்நேரிட்டால் எதுவிலும் ஐக்கியஅரசாட்சி தயாராயிருக்கும் என்றும் அதில் சொல்லப்பட்டிருக்கிறதாம்.

ரோஸ்கோப்சில்வறம் லீவர்கெடியாரம்.



இக்கெடியாரமானது மிக்கல்திறந்தமுகமுள்ள முடியுள்ளதாயும் நல்ல பெலப்புள்ளதாயும் ஒருமுறை சாவிகொடுத்தால் 36 மணித்தியாலத்துக்கு ஓடும்படி செய்யப்பட்டிருக்கிறது இதன்விலை ரூபா 2 அணா 8 தபாற்செலவு அணா 4

தண்ணீர்ப்படங்கள்.

இந்துதேவதைகள், இங்கிலீஷ்காரமனிதர், மனுஷிகள், போர்வீரர் மிருகங்கள், பூக்களாதிய வேறுவேறுவிதபடங்களுள்ள 12 தாளுள்ள கட்டொன்று தபாற்செலவுட்பட 12 அணா இப்படங்கள் வெறுகாயிதங்கள்மீது வைத்து தண்ணீரிட்டால் அக்காயிதங்கள்மீது பதிந்துவிடும்.

Bijan & Brothers
Bowbayar Cullcutta.

இந்தியாவில் பெரியவேலைச்சாலை.

பிஜோலி புளூட் ஹார்மோனியம்,

ரிஜிஸ்டேட் நம்பர் 116. 3வரு உத்தரவாதம்.

இந்தஆர்மோனியம் எங்கள் வேலைச்சாலையில் கைதேர்ந்த அநுபவசாலிகளால் எங்கள் மேற்பார்வையில் செய்யப்பட்டது. பெரும்பாலும்தேக்குமரத்தினாற் செய்யப்பட்டிருக்கிறது. மற்றச்சாமான்கள் முதற்தரமானவைகளாய்ப் பரிசோதித்து அனுப்பிக்கப்பட்டிருக்கிறது. நல்லதொனியும் இனிமையும் திரமுமானதென நாங்கள் உத்தரவாதஞ் சொல்லுகிறோம். கற்றலோக் இலவசமாய் அனுப்பப்படும்.

விலை,

பழகுகிற புளூற் ரூபா 15.
3 ஒக்டேவ் 1 செற்றீட் 3 ஸ்றப் ரூபா 17-20-25
3 " 2 " 4 " 26-30-35

மடிக்கக்கூடியதும் காலாலுங்கையாலும் பாவிக்கக்கூடியதும்.

3 ஒக்டேவ் 1 செற்றீட் 3 ஸ்றப் ரூபா 40-45-50
3 " 2 " 4 " 60-65-70

ஆடர்அனுப்பும்போது முற்பணமாக 10 ரூபா அனுப்பவேண்டும். வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுகொடுக்கப்படும்.

S. Keshim & Co,
Bijolee Flute Manufacturers
42-6, Harrison Road
C. P. CAUTALCT

பி சுப்பருயின் அபூர்வஆயுர்வேத அவுஷதங்கள்.

1. தாதுப்புஷ்டிமருந்து—அதன்குணத்தை எடுத்துமுடியாது. அநுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாதுநஷ்டம், பலஹீனம், ஆண்மைகெடல், பசியின்மை. கண்கால் எரிவு, [illegible]வாட்டி சீக்கிரஸ்கலிதம், சொப்பனஸ்கலிதம், [illegible]கைகால் இடுப்புமுதலிய அவயவங்களில் சோர்[illegible] வலி சோம்பல், மேகச்சூடு, பாண்டு,சோகை, [illegible]வெள்ளை, வெட்டை, நீரிழிவு, மதுமேகம், [illegible]ரையடைப்பு இன்னும் பற்பல மூத்திர .ரோகங்களைப்போக்கும். சரீரபுஷ்டி, புருஷத்தன்மை, ஞாணசத்தி, தாதுவிருத்தியையுண்டாக்கும். தாதைக்கெட்டிப்படுத்தும். டப்பா 1-க்கு விலை ரூபா2. வி·பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

2 அக்கினிமாந்தத்திற்குமருந்து—பசியின்மை புளித்தஏப்பம், செஞ்செரிச்சல். மலச்சிக்கல்,வயிற்றுவலிவாய்நாற்றம், அஜீரணம். வயிற்றுப்பிசம்,நித்திரையில்லாமை, பித்தஉபத்திரவங்களைச்சொஸ்தப்படுத்தும். பசிதீபனமும்தேகஆரோக்கியமுந்தரும். டப்பா 1-க்கு அணா 8. வி. பி, செலவு 1 அல்லது 2 டப்பாக்கள்வரையில் அணா 5 பிரத்தியேகம்,

3 பிரமேகநிவாரணி—எக்காரணத்தினால் உண்டாயிருக்கும் மேகவெள்ளை, வெட்டை நீர்வத்தல், நீர்தாரை எரிவு, சீழ், ரத்தபவுதல்முதலிய வியாதிகளை ஆண்பெண் இருதரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலைரூபா 1. வி.பி. செலவு 1முதல் 6 சீசாக்கள்வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

4 லக்ஷ்மீகாகஸ்தூரிமாத்திரைகள்—தாம்பூலந்தரிப்பவர்கள்கையிருப்பில் எப்பொழுதும்வைத்துக்கொள்ளவேண்டியவிலையுயர்ந்தவஸ்து. தந்தநோய் வாய்நாற்றம், அஜீரணம், பித்தவாய்வு இவைகளை நீக்கும். தாம்பூலத்துடனாவது தனியாகவாவது சாப்பிட்டபின் 2 மாத்திரை உபயோகித்தால் எப்பேர்க்கொத்த கனத்தசாப்பாட்டையும் உடனே ஜீரணஞ்செய்வதுடன் வாயில் அனேகமணிநேரம் சுகந்தவாசனையிருக்கும் பிரதிதினம்காலையில் 2 மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்தஅக்கினிமந்தம், மலச்சிக்கல்,அஜீரணத்தினாலுண்டாகும் வயிற்றுழிவு, வயிற்றுநோய், செஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன்,உபயோகித்துவந்தால் சன்னிகிட்டாது சன்னியில் கொடுக்கச் சன்னிதீரும். இதில் வாசிமுதலானயாதொருஅபாயகரமானவஸ்துசேரவில்லை. காஷ்மீர்தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சைக்கற்பூரம் முதலிய அனேக விலைபெற்ற மருந்துச்சாமான்களும் வாசனைத்திரவியங்களுஞ்சேர்த்துச்செய்யப்பட்டிருக்கிறது. தாம்பூலத்துடன்உபயோகித்தால் பச்சைக்கற்பூரம்முதலாகிய வாசனைவஸ்துக்கள் உபயோகிக்கவேண்டியது அனாவசியம். அரையிற் குழந்தைகள்முதல் வயதுசென்றவர்களுக்குச் சளி, இருமல் காசம் யாலரு, பீனிசு, சுரம் முதலானவைகளுக்கு வயதுக்குந்தேகத்துக்கும் தகுந்தபடி 1 முதல் 4 மாத்திரைகள்வரையில் வெற்றிலைச்சாற்றில் கொடுக்கச்சுகமாகும். சீசா 1-க்குவிலைஅணா 4 இந்தியாவில் 1 முதல் 12 சீசாக்கள்வரையில் அனுப்பபாக்கிங்குதபால்சார்ச அணா5ம் சிலோனுக்கு அணா 7ம் பிரத்தியேகம்.

5 சர்வநோய்சம்ஹாரி—இத்தைலம்கொஞ்சம்தேய்த்தால் கைகால் சந்துக்களின் பிடிப்பு வீக்கம், முடக்கம், மார்புநோய், தலைநோய், கழுத்துநோய், பக்கசூலை, இடுப்புநோய், குதகவலி, பாரிசவாயு, மேகவாயுமுதலான இன்னும் தேகத்திலுண்டாகும் எல்லாநோய்களையும் சீக்கிரத்திற்குணப்படுத்தும். சீசா ஒன்றுக்குவிலைரூபா 1 வி பி செலவ ஒன்றுமுதல் 3 சீசாக்கள்வரையில்அனுப்ப அணா5 பிரத்தியேகம்.

6 சுகந்தகூந்தல்தைலம்—இத்தைலத்தால் தலைமயிர் மீசை கண்இமை செழுசெழுப்பாகவும் நெருக்கமாகவும் கறுப்பாகவும்வளரும். கண்களைக் குளிர்ச்செய்யும். சகல கண்ணோய்களுந் தலைநோய்களுநீக்கும். செம்பட்டைமயிர் நறைக்கும். மயிர்உதிராமல் காக்கும், கண்களுக்குப் பிரகாசத்தைத்தரும். விலை புட்டி 1க்கு அணா 8 வி பி செலவு ஒன்று இரண்டு சீசாக்கள்வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

7 நேத்திரபிந்து—கண்ணோய் கண்ணுறுத்தல் கூசல் நீர்வடிதல் மங்கல் அந்திமாலை பீளைக்கட்டல் மாமிசம்வளர்ந்திருத்தல் பூவிழுந்திருத்தல் கண்சிவப்பு எரிச்சல் கண்இமைபருவம் இமைகளின் வலி கண்புகைச்சல் இவைகளைக்குணப்படுத்தும். மாணுக்கர்களுக்கும் ஆய்ந்தபார்வையோடு வேலைசெய்பவர்களுக்கும் மேலுசிறந்த ஔஷதம். மருந்துஉபயோகிதால் கண்ணாடிபோடவேண்டியது அனாவசியம் சீசா 1 விலை அணா 8 வி பி செலவு 1முதல்6 சீசாக்கள்வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

கர்ணபிந்து— காதில் சீழ்வடிதல் வலி குத்தல் குடைச்சல் காதடைப்பு இரைச்சல் செவிடு இவைகளைக் குணமாக்கும். செவிடர்குக்கூட கேட்கும். சீசா 1 விலை அணா [illegible] வி பி செலவு ஒன்றுமுதல் ஆறு சீசாக்கள்வரையிலனுப்ப அணா 5 பிரத்தியேகம்,

9 சகலபடைசம்காரன்—இடுப்பு தொடையின் இடுக்கு முதலியஇடங்களில் உண்டாகி ஓயாத கமைச்சலைத்தந்து வெகுகாலமிருந்து பற்றுத்தேமல், படரும் பேசப்படை சொறிசிரங்கு தடிப்புப்படை தேமல்முதலியவைகளை [illegible] குணப்படுத்தும். சீசா 1க்கு விலை அணா [illegible] வி பி செலவு ஒன்றுமுதல் பன்னிரண்டு சீசாக்கள்வரையிலனுப்ப அணா 5 பிரத்தியேகம்

10 பேதிமாத்திரைகள்—வயிற்றில் [illegible] ஆயாசமில்லாமல் சுகமாய்ப்பேதியாகும். பித்தஉபத்திரவங்கள் சகலவாயு மலச்சிக்கல் அக்கினிமாந்தம் வாதம் கைகால்முதலிய அவயவங்களின் குடைச்சல் வலி [illegible] முதலியவைகளைச் சொஸ்தப்படுத்தும். சீசா 1க்கு அணா எட்டு. வி பி செலவு 1 முதல் [illegible] சீசாக்கள்வரையில் அணா5 பிரத்தியேகம்

11. ஜ்வரசம்ஹாரி—நீராதநாட்பட்டசுரங்கள், குளிர்சுரம், முறைசுரம், வாதசுரம் காமாலை,பிடரிவலி,இடுப்புவலி, விலாவலி,முழங்கால்வலி, உடம்புவெருப்பு, மயக்கம், தாகம் இரண்டாமுறைச்சுரம்,காலாமுறைச்சுரம்முதல் சகல சுரங்களை அடியோடுபோக்கும். டப்பா 1-க்கு வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

12. உரோமசம்ஹாரி—இச்சூரணத்தை மயிருள்ளவிடத்தில் தடவினால் வெகுஎளிதில் மயிர்நீங்கிவிடும்.சீசா1-க்குஅணா4. 1முதல்6சீசாக்கள்வரையில் வி. பி. செலவுஅணா5 பிரத்தியேகம்

13. சுகந்தபல்பொடி—நல்லஜீரணசக்தியைத் தரும். பல்வலி எக்காலத்திலும் வராது.பல் எக்காலத்திலும்விழாது. சீசா 1-க்கு விலைஅணா3 வி.பி செலவு 1 முதல் 5 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்,

14. ஸ்கலிதநாசனி—பலவீனத்தாலும்,உஷ்ணத்தினாலும், சிற்றின்பத்தில் பாலியத்திலழுந்த மூழ்கியிருந்த காரணத்தாலும், ஜாக்கிரத்திலும் சொப்பனத்திலும் இந்திரிய நஷ்டமாவதை நிற்பாட்டித் தேகதிடத்தைத்தரும். சீசா 1-க்கு அணா 8. வி.பி, செலவு 1 முதல்6 சீசாக்கள்வரையில் அணா 5 பிரத்தியேகம்.

15. உயர்ந்தகஸ்தூரி—மிகவும்சேர்த்தியானதும்முதல்தரமானதும் காஷ்மீர்தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி நம்மிடத்தில் எப்போதும் கிடைக்கும். தோலா 1-க்கு ரூபா 48 ஒருரூபாய்க்குக்குறையால் சில்லறையிலும்விற்கப்படும். வி. பி. செலவு பிரத்தியேகமாகும்.

16. தேள்கொட்டின்மருந்து—இம்மருந்தைவிஷந்தீண்டிய இடத்தில் தடவினால் க்ஷணமேவிஷமிறங்கி வருத்தப்பட்டுச் சகிக்கமுடியாதவேதனையில்லின்றுநீங்கி யாவரும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய்ஆனந்திக்கும்படியான அநுகூலத்தைத்தரும். [illegible] சீசா 1-க்கு அணா 4. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 12 சீசாக்கள்வரையிலும் வி பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

முக்கியகுறிப்பு—ஒரேதடவையில் 12 சீசாவுக்குக்குறையாமல்தேள்கொட்டின்மருந்தை வாங்கினால் டஜன் 1-க்குரூபா 2-8-0 வீதங் கொடுக்கப்படும். வி.பி. செலவு அணா 5 பிரத்தியேகம். இக்குறிப்புதேள்மருந்துதவிர மற்றெந்த மருந்திற்கும் சம்மந்தப்படமாட்டாது.

17, மேகரணமருந்து—இதைவெள்ளைத்துணியில்தடவிரணங்களின்மேல்போட அரையாப்பு கண்டமாலை, விப்புருதி, தொடைவாழை,செவ்வாப்பு, ஆசனப்பவுத்திரம், அழுகுளியன், பிளவை, கிரந்தி, மேகவெடிப்பு, இலிங்கப்புற்று, யோனிப்புற்று, முதலிய இரணங்கள் அதிசொஸ்தமாகும். விலை சீசா 1-க்கு அணா 8. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 3 சீசாக்கள்வரை வி. பி, செலவு அணா 5 பிரத்தியேகம்.

18. கண்டசுத்திமாத்திரைகள்—டைரக்ஷனில் சொல்லியபடி இதைச்சாப்பிட்டுவந்தால் தொண்டைக்கட்டு,தொண்டைகம்மலை நீக்குவதன்றி இன்பமாய்ப் பாடுதற்குஇசைந்த குரலையுந்தரும்,சங்கீதவித்வான்களுக்கும் பிரசங்கஞ்செய்பவருக்கும் உபாத்தியாயர்களுக்கும்இது ஓர் அவசியமானஔஷதம், எத்தனைநேரம்பாடினாலும் பிரசங்கித்தாலும் குரல் கம்மாது.இனிமையான ஓசையைத்தரும். விலைசீசா 1-க்கு அணா 8,இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 6 சீசாக்கள் வரையில் பாக்கிங்கு தபால்முதலியசெலவு அணா 5 பிரத்தியேகம்.

19. சுகந்தஸ்நானப்பொடி— இந்த வாசனைப்பொடியைத் தினந்தோறும் தேகத்தில்தேய்த்துஸ்நானஞ்செய்துவந்தால் தேகத்திற்குச் சுகந்த பரிமளத்தைத்தந்து தேமல், அரிப்பு, சொறி, சிரங்கு, சற்றுமைநாற்றம், கைகால் எரிச்சல், மேகசாங்கை, சரீரவரட்சி, கணச்சூடு, வெடிப்பு, கரப்பான், தலைவலி, பொரிமேகம், படர்தாமரை,மேகஊறல், கிரந்திமுதலிய இன்னும் அனேகவிததோலைப்பற்றிய வியாதிகள் தீரும். நல்லவாசனையும் காந்தியும் லக்ஷ்மீகரமும் ஆரோக்கியமுமுண்டாம். அரைவீட்டுக்குழந்தைமுதல் யாவரும் உபயோகிக்கலாம். டப்பா 1-க்கு விலை அணா 8, வி. பி. செலவுஅணா 3 பிரத்தியேகம்

20 சஞ்சீவிமாத்திரைகள்—இம்மாத்திரைகளினால் தலைவலி, தலைபாரம், சளி, இருமல், சுரம், மயக்கம், வாந்தி, விஷசுரம், இசிவு, வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, தெற்குத்திக்கனை முதலியநோய்கள்தீரும். அரைக்குழந்தைமுதல் யாவரும்உபயோகிக்கலாம். விலை சீசா 1-க்கு அணா10 இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 6 சீசாக்கள்வரையில் அனுப்ப வி. பி. முதலிய செலவுகள் அணா5 பிரத்தியேகம்.

21. மஹாகேசரோசனைமாத்திரை—இம்மாத்திரையினால் இருமல், சளி, சுரம்,வயிற்றுப்பிசம், இளைப்பு, விஷமயக்கம், தெற்குத்திக்கனைசன்னி, வயிற்றுப்போக்கு, தோஷம், ருக்குமாந்தம், ஜுகணம், செவ்வாப்பு, கடுவான், காட்டன் பால்மாந்தம்முதலியஎல்லாமாந்தங்களும், சுரங்கி [illegible] மலைவலக்கட்டு முதலியதுகளும், ஜலசுரம், முறைக்காய்ச்சல் பலவித சுரங்களும் அடியோடுநீங்கும். சீசா 1-க்கு விலைஅணா 1. 1 முதல் 6 சீசாக்கள்வரையில் வி. பி. செலவு அணா பிரத்தியேகம்.

22, கரப்பானுக்கும்சொறிசிரங்குக்கும்மருந்து—இம்மருந்தைதடைரக்ஷனில் சொல்லியபடி பூச்சுக்குவட்டுஉபயோகித்துவருவதால்தேகத்தில எவ்வித தமைச்சல்களும், சொறி, சிரங்கு,வரட்டுச்சொறி, அனேக குழந்தைகளுக்கு தேகமெங்கும்அல்லது சில பாகங்களில் எண்ணிக்க கமைச்சலையும், தொந்தரவையும்தருகின்ற அவ்விதகரப்பான்களையும், வெகு சீக்கிரத்தில் அகற்றிவிடும் விலை சீசா 1 அணா8இந்தியாவிலும் பர்மாவிலும் அனுப்ப வி.பீ. செலவு 1 அல்லது 2 சீசாக்கள்வரையில் அணா5பிரத்தியேகம்.

23. கேசவர்த்தனி—உசிதமான வாசனைச்சாமான்கள் சேர்த்துச் செய்யப்பட்ட இத்தைலம் கூந்தல் செழிப்பாகவும் நெருக்கமாகவும் கறுப்பாகவும் வளரும். கண்கள் குளிரும், தலைநோய் போகும். மூளையைப்பலப்படுத்தும் மிகவும் வாசனையுள்ள தைலம் சீசா ஒன்றுக்கு ரூபா 1வி பி செலவு ஒன்றுஅல்லது இரண்டு வரையிலனுப்ப 5 அணா பிரத்தியேகம்.

24 இராஜாமிர்தம்—தாபரவர்க்கத்தைச்சார்ந்த அனேக அபூர்வமூலிகைகளாற் செய்யப்பட்ட இச்சூர்ணம் காபி தேயிலைக்குப்பதிலாக உபயோகப்படுத்துவதற்காகவேதயார்செய்யப்பட்டிருக்கிறது. காபி தேயிலைக்குள்ள துர்க்குணங்கள் இதற்கில்லை, காப்பிப்பொடியைஎப்படிஉபயோகிக்கிறோமோ அவ்விதமாக இதையும் உபயோகிக்க மிகவும்ருசியான பானமாகும். அரைக்குழந்தைமுதல்விருத்தாப்பியர்வரையில்எல்லாரும் உபயோகிக்கலாம். சுரம் சன்னி கர்ப்பம் பிரசவம் காலரா முதலியகாலங்களில் ஷீரணத்தின் கஷாயத்தைப் பாலுடன் அல்லது பால் சர்க்கரமல் சமயத்துக்குத்தக்கபடி உபயோகிக்கலாம் நோய்களிலிருந்து குணப்படுவதுமன்றி நோய்வராமலுங் காக்கும். பித்தவாயுகாசக்ஷயம் அஜீரணம் மலச்சிக்கல் தலைவலிமுதலியவைகளைப்போக்கும், இரத்தத்தைச்சுத்தஞ்செய்து தாதுவிர்த்தியையும் தேகஆரோக்கியத்தையுந்தரும் அக்கினிமாந்தமுள்ளவர்களுக்கும் மதுமூத்திரம் அதிமூத்திரரோகிகளுக்கும் அருமையானவன்று இதைவழக்கமாய் உபயோகித்துவந்தால் மதுமூத்திரரோகிகளின் நீருள்ள சீந்தியையும் நீரின் அளவையுங்குறைத்தமூத்திரரோகத்தை அடியோடுகுணமாகும் தேகத்தின் உஷ்ணத்தைச் சாந்திசெய்யும் மூளையைப் பெலப்படுத்தி ஞாபகசத்தியை யதிகப்படுத்தும். மாணாக்கர்கள் வக்கீல்கள் உத்தியோகஸ்தர்கள் பலசக்த்தக்குணமுள்ள காபிதேயிலையை விட்டுவிட்டு இதைஉபயோகிக்க அருமையான சூர்ணம் டப்பா ஒன்றுக்கு விலை அணா 6. வி பி செலவு 3 அணா பிரத்தியேகமாகும்.

25 சர்பத்துகள்—திராக்ஷப்பழம் நன்னாரிவேர் ரோஜாப்புஷ்பம் வாழைப்பழம் எலுமிச்சம்பழம் மாதாளம்பழம் கிச்சிலிப்பழம் பாதம் அன்னாசிப்பழம் தருஞ்சிப்பழம் கொமட்டிப்பழம் இமை.இலந்தைப்பழம் தாமரைப்புஷ்பம் இஞ்சி சத்துகள், ஷெர்பத்துகள் பழவகைகளின் சத்துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும்தனித்தனிக்காகவே உபயோகிக்கவேண்டும். ஒருசேர் குளிர்ந்தசலத்திலாவது சோடாவாட்டரிலாவது சுமார் 5 துளிகள் சேர்த்தால் மிகவும் இனிப்பாகவும்,எந்தப்பழச்சர்பத்து உபயோகப்பட்டதோ அந்தப்பழத்தின் மதுரமானவாசனையோடுகூடிய சர்பத்தாகும். அரை அவுன்சுச்சீசாக்களில்விற்கப்படும்.இச்சிறுசீசாவிலுள்ள சர்பத்து50 சேர் குளிர்ந்தசலத்துடனாவது சோடாவாட்டரோடாவது சேர்த்தால் 50 சேர் திறமானசர்பத்தாகும். அரைஅவுன்சுள்ளசீசா ஒன்றுவிலை அணா 8. வி பி செலவு ஒன்றுமுதல் ஆறு சீசாக்கள்வரையிலனுப்பஅணா5 பிரத்தியேகம்

26 கஸ்தூரிமூக்குத்தூள்—இந்த மூக்குத்தூள் மிகவும் சேர்த்தியானமுறையாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. செழுஞ்சம்பமான வாசனையுடையது. ஒருகாலைக்கு ஒருமனிதன் எவ்வளவுமூக்குத்தூள் உபயோகிப்பானோ அவ்வளவு சாதாரண புகையிலை மூக்குத்தூளுடன் நம்முடையகஸ்தூரி மூக்குத்தூளில் ஒருசிட்டிகைசேர்த்து நன்றாய்க்கலந்துகொண்டால் அந்தத்தூள் முழுவதும் அதிக மனோரம்மியமான வாசனையுள்ள மூக்குத்தூளாகிவிடும்.கடைகளில்விற்கும் சாதாரணமூக்குத்தூளுடன் ஒருசிட்டிகைசேர்த்தாலே போதுமானது. தனியாக உபயோகப்படுத்துவது அநாவசியகம். இத்தூள்சேர்த்த மூக்குத்தூள்நெடுநாள்வரைக்கும் சுகந்தபரிமளத்துடன் காரம்போகாமலிருக்கும். தலைவலி பீனிசம் ஜலதோஷம் நாசியிலிருந்துநீர்வடிதல் மண்டைக்குத்து நீர்ப்பீனிசம் நாசியில்துர்நாற்றம் மயக்கம் முதலியது தீரும். இதில் லவசாரஞ்சேரவில்லை.வழக்கமான மூக்குத்தூள் உபயோகிப்பவர்களிடத்திலுள்ள துர்நாற்றத்தைநீக்கிச் சதாசுகமுமன்று பரிமளத்தை வீசிக்கொண்டேயிருக்கும். இத்தூள் உபயோகித்தால் அடிக்கடி நசியம்போடுகிற வழக்கத்தை நாளுக்குநாள்குறைத்து கடைசியில் சிலர் தானேபோடும் அப்பியாசத்தையே முற்றிலும் விட்டுவிடும்படிசெய்யும். ஒரு சீசாவிலுள்ள சுகந்தமூக்குத்தூள் சுமார் ஒருமாசத்திற்குப்போதுமானது. சீசா ஒன்றுக்கு விலை அணா4 வி பி செலவு 1 முதல் 3 சீசாக்கள்வரையில் அணா 3 பிரத்தியேகம், 4 முதல் 6 சீசாக்கள்வரையில் வி பி செலவு அணா 5 பிரத்தியேகம் 7முதல் 12 சீசாக்கள் வரை வி பி செலவு அணா7

27அசோகாரிஷ்டம்—ஸ்திரீகளுக்குமாதத்தோறும்பகிஷ்டை சரிவரஉண்டாகாதிருத்தல்அக்காலங்களில் பகிஷ்டையாகுதல் பகிஷ்டை காலங்களில் வெகு கடினமான சூலைநோயுண்டாகுதல் பகிஷ்டையாகுஞ் சமயத்தில் வயிற்றுவலி காலெரிவு தேகக்கனத்தல் சாதியாகுதல், பகிஷ்டையாகுஞ்சமயத்தில் ஜூல அதிகமாகப் போகுதல் முதலிய ரஜோதோஷங்களும் யோனிசுருக்கம் யோனிப்புற்று கருப்பையிலிருந்துவெளிவருதல் எப்பொழுதும் கருப்பையிலிருந்து வெண்மையான நீர்வடிதல் யோனிரணங்கள் இரைவமுதலிய ஸ்திரீசம்பந்தமான சகல ரோகங்களையும் போக்குவதில் இது சிறந்த ஔஷதம். குதிர்க சூலைநோய்களுக்கும் மற்றும் சகல யோனிசம்பந்த ரோகங்களுக்கும் அற்புதமாய நன்மைசெய்யும். விலை சீசாஒன்றுக்கு ரூபா 1. ஒன்றுஅல்லது இரண்டு சீசாக்கள் வரையில் வி பி செலவு அணா 5 பிரத்தியேகம்.

எனது விலாசம்
பி. சுப்பருய்
ஆயுர்வேதஔஷதசாலை
ஸ்ரீ வெங்கடேசபெருமாள்கோவில் சன்னதி
தஞ்சாவூர்

☞ MY ADDRESS
P. SUBBRAOY
AyurvedicPharmacy
Sri Venkedasa
PerumalKoil
Sannathy
Tanjore

Printed and published by
S. Tmbimuttupillai at his Achuvaly
Gnanapragasa Yanthira office,
Achuvaly, Jaffna